தற்சமயம் காரியம் சாதிக்க ஹிட்லரும், முஸோலினியும் என்ன சொன்ன போதிலும், ஹிட்லர் ஜயித்தால் இந்தியாவை எவ்விதம் நடத்துவார் என்பதைப்பற்றி ஏற்கனவே அவர் சொல்லியிருப்பவைகள் சற்றும் நம்பத்தக்கதில்லை. உலகத்தில் நாகரீகமடைந்த தேசத்தார்களுடன் நம்மைச் சேர்க்க நாம் லாயக்கில்லாத கீழ்த்தர ஜாதியினரென்பது ஹிட்லரின் அபிப்பிராயம். யாருடைய சுதந்திரத்தை ஸ்தாபிக்க தான் முயற்சித்துவருவதாகச் சொல்லிக் கொள்ளுகிறாரோ, அப்படிப்பட்ட தன் இனத்தார்களுக்கும், தன்னுடன் நெருங்கிப் பழகினவர்களுக்குமே சுயேச்சையாகப் பேசுவதற்கும், காரியங்கள் செய்வதற்கும் உரிமை அளிக்க ஹிட்லர் தயாராக இல்லை. அல்லாமலும் அவர்கள் நடவடிக்கைகளை ரகசியமாக உளவு பார்த்தும் வருகிறார். ஹிட்லரின் செய்கைகளின் ஒழுங்கு அல்லது விவேகம் இவைகளைப்பற்றி எவரும் சந்தேகித்து ரகசியமாகப் பேசுவதாகத் தெரிந்தால், அப்படிப் பேசியவர்களுக்குக் கடுமையான சிக்ஷை விதிக்கிறார். இந்நிலைமையில் ஹிட்லர், நம்முடைய தலைவிதி இன்னதென்பதை நிர்ணயிப்பதற்கு முக்யஸ்தராக ஏற்பட்டால், நமக்கு என்ன ஆபத்துகள் நேருமோ என்று திகில் உண்டாகிறது. அவரால் ஜயிக்கப்பட்ட தேசங்களில் உள்ள ஜனங்கள் உயிர் வாழ்க்கைக்கு அவசியமான பதார்த்தங்கள், ஆகாரம், உடை இவைகள்கூடக் கிடைக்காமல் கஷ்டப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. தான் ஜயித்த நாடுகளை, அந்நாட்டு ஜனங்களின் சௌகரியம், சுகம் இவைகளைக் கவனியாது, தன் சொந்த தேச மக்களுக்கு ஏற்கனவே உள்ள சௌகரியங்களை அதிகப்படுத்துவதற்காக ஹிட்லர் உபயோகிக்கிறார். அவ்விடத்திலாவது, தன் நாட்டின் நன்மைக்கென்று தானாகவே தன்மேல் சுமத்திக்கொண்ட பொறுப்புக்கு, உண்மையாக ஹிட்லர் நடந்து கொண்டிருந்தாரானால், நீங்கள் கஷ்டப்பட்டாலும் மானிட வர்க்கத்தில் வேறு சிலர் சுகமடைகிறார்கள் என்ற வேதாந்தமான ஆறுதலை நாம் அடையலாம். ஆனால் ஜயித்த நாடுகளிலுள்ள ஜனங்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட பொருள் எல்லாம் ஹதம் செய்வதற்குவேண்டிய கருவிகள் செய்ய உபயோகமாகிறது. வெகுகாலமாக நாம் அமைதியுடனும், உயிர், சொத்து இவைகளுக்கு யாதொரு பயமின்றியும் வாழ்ந்துவந்திருக்கிறோம். அப்படிப்பட்ட நம் மத்தியில் யுத்தம் பரவுமானால் அது நம்மை ஒரு அலைப்பு அலைக்கத்தான் செய்யும்.

தேசத்தின் சிதைவு.

ஒரு சமயம் ஜெர்மானியர்கள் தங்கள் அரசர்களினுடைய கொடுந்தன்மையை விரும்பாமலும், அவர்களுடைய வழிகளை ஒப்புக்கொள்ளாமலும் இருந்ததாக ஒரு நம்பிக்கை இருந்தது. கூடுமானால் அவர்கள் நாஸி அரசாக்ஷிக்கு விரோதமாய்க் கிளம்பித் தங்கள் தலைவர்களை யுத்தத்தை நிறுத்துமாறு கட்டாயப்படுத்தும்படி,

அவர்களது சன்மார்க்க நியாய உணர்ச்சிகளைத்தூண்ட முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால் இது நடவாத காரியமாய் ஆகிவிட்டது. தவிரவும் அவர்களுடைய் தலைவர்கள் குடிஜன ஆட்சியின் பேரிலும், மேற்படி ஆளுகிக்குட்பட்ட ஜனங்களின் பேரிலும் கொண்டிருந்த துவேஷத்தை ஜெர்மானியர்களிடையில் நன்றாகப் புகட்டிவிட்டார்கள். ஒருவேளை ஜெர்மனி நம்மிடையில் வருவதாய் இருந்தால்—இன்னும் ஜெர்மனியில் யாராவது பிழைத்திருந்தால்—நாம் பார்க்கப் போவது சாதுவான, காருண்யமுள்ள, மானுஷீக அன்பென்னும் பால் நிறைந்த ஒரு ஜெர்மானியனல்ல. மனித ரத்த வெறிகொண்ட மனுஷ்ய ரூபமான ஒரு ராணுவப் பிசாசையே பார்க்கும்படி நேரிடும். அம்மாதிரி விதிவசம் நமக்கு ஏற்பட்டால், நாம் எவ்விதமான கஷ்டங்களுக்குள்ளாவோம் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

19—10—40 தேதியில் வெளியான ஹிந்து பத்திரிகையின் 7-ம் பக்கத்தில் "நாஸி விமானியின் குதூகலம்" என்ற தலையங்கத்தின் கீழ் ஒரு சிறு பகுதி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு:—"நேற்று இரவு (17—10—40) ஒரு நாஸி பாம்பர் விமானி லண்டன் நகரின்மேல் வெடிகுண்டுகள் போடுவதில் தனக்கு ஏற்பட்ட விஸ்தரிக்க இயலாத குதூகலத்தையும், மாளிகைக் கூட்டங்களின்மேல் அவைகள் தாக்கி வெடித்ததில் தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியையும் பற்றி ஒரு பெர்லின் ரேடியோ கேட்டுக்கொண்டிருந்த கூட்டத்திற்கு வெளிப்படுத்திக் கொண்டிருந்தான். செவ்வாய்க்கிழமை இரவு எதிர்த்த விமானி எவ்வித ராணுவஸ்தலத்தையும் எதிர்த்ததாகச் சொல்லவில்லை. அவ்விமானி கூறியதாவது: "இவ்விதமாக லண்டனை எதிர்ப்பது ஒருபொழுதும் மறக்கமுடியாத மகிழ்ச்சியை அளிக்கிறது. நாங்கள் வட பிரான்ஸ் பிரதேசத்திலுள்ள எங்கள் விமான நிலயத்திலிருந்து கிளம்பி, வழியில் ஒவ்வொரு மேகத்திலும் கூடுமான வரை மறைந்து, லண்டனின் வெளிப்பிராந்தியத்தை அடைந்தோம். பிறகு களங்கமற்ற சந்திரவெளிச்சத்தை அடைந்து, சுலபமாக தெருக்களையும் மாளிகை வரிசைகளையும் காணமுடிந்தது. நாங்கள் அங்கு சேர்ந்தபொழுது இரண்டு பலமான தீக்கள் மூட்டப்பட்டு எரிந்துகொண்டிருந்தன. நாங்கள் சொல்லவொண்ணு உற்சாகத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த நிமிஷம் வந்தது. என்னுடைய கூட்டாளி "போடு" என்று கத்தினான். உடனே முன்பே எரிந்துகொண்டிருந்த இரண்டு தீக்களுக்கருகில், இரண்டு குண்டுகள் வெடித்தன. லண்டனின், முக்கியமாக எங்களுக்குப் புலப்பட்ட, மாளிகை வரிசைகளுக்கு, எங்களுடைய வெடிகுண்டுகளால் ஏற்படக்கூடிய நாசத்தை நினைத்து, விமானத்திலிருந்த நாங்கள் வெகு உற்சாகப்பட்டோம். அதே சமயத்தில் எங்களை நோக்கி நூற்றுக்கணக்கான ஆராய்ச்சி விளக்குகள் வீசப்பட்டன. நாங்கள் அதிவேகமாக உயரப்பறந்து திரும்பிப்போகும்படி நேர்ந்தது. நாங்கள் மறுபடியும் பிரிடிஷ் கால்வாய்க்குத் திரும்பவந்தது எங்கள் அதிர்ஷ்டவசந்தான். நாங்கள் தரைக்கு வந்ததைப்பற்றி சந்தோஷமடைந்தபோதிலும், லண்டன் மீது குண்டுகள் வீசின மகிழ்ச்சி மறக்கக்கூடியதல்ல."

பிரிடன் மீது ஜெர்மனி கொண்டிருக்கும் ஆழ்ந்த த்வேஷத்திற்கு இது ஒரு பாவனையாகும். இந்த விமானிக்கு, மேற்கண்ட தீச்செயலிலிருந்து தப்பிவந்த சந்தோஷத்தைக்காட்டிலும், நிரபராதிகளுக்கு தான் விளைவித்த அற்பத்தனமான கொடுஞ் செயல்கள் அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தன. இப்பேர்ப்பட்ட கொடுஞ் செயல்கள் யுத்தத்தின் பிரதான போக்கை ஒருவிதத்திலும் பாதிக்கமாட்டா. அவைகளின் குணபாகம் வேண்டுமென்றே செய்யும் கொடுமையைத்தவிர வேறல்ல. இம்மாதிரியான ஜனங்கள் ஜய வீரர்களாக வரும்பொழுது, அவர்களிடம் தயை என்பதை நாம் எதிர்பார்க்க முடியுமா?

அஹிம்ஸை பரிகாரம்.

இம்மாதிரி ஜனங்களை, அஹிம்ஸையால் வெல்ல முடியுமா? அஹிம்ஸை என்பது நல்ல தத்துவந்தான். இவ்வுலகத்தில் மனிதர்கள் தங்களுடைய நல்ல ஸ்வபாவங்களை மறந்து மனமார நல்ல குணங்களை அமுக்கி, கேவலம் மிருக பலத்தையே கைக்கொண்டிருக்கிறார்கள். அம்மனிதர்களைத் தங்களுடைய துன் மார்க்கங்களிலிருந்து திரும்பும்படி செய்வது அஸாத்யமான காரியம். அவர்களுக்குப் பதிலுக்குப் பதில் செய்வதுதான் சரியான வழி. இதைத்தான் பிரிடன் செய்துவருகிறது. பிரிடனில் யுத்தத்தை நடத்துபவர்கள், தங்களால் இயன்ற அளவு ராணுவ ஸ்தலங்களையே தாக்குவதாக உத்தேசித்திருக்கிறார்கள்; ஆனாலும் சிலர் ஜெர்மனிக்குப் புத்திவரும்படி செய்யவேண்டுமானால், ஜெர்மனியிலிருக்கும் பொதுஜனங்களை யுத்தத்தின் கொடுமைகளை அனுபவிக்கச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். அம்மாதிரி உணர்ச்சி மேலோங்கக்கூடாது என்பது எனது நம்பிக்கை. நியாய வழியில் நிற்கும் கக்ஷியானது இந்த யுத்தத்தில் அஹிம்ஸையால் ஜயிக்குமென்று சாதாரணமாய் ஒப்புக்கொள்ள முடியாது. இதற்கு ஆதாரமாக, பகவத்கீதை என்னும் நம்முடைய பெரிய புராணத்தையும், அதில் அர்ஜுனனுக்கு அஹிம்ஸையை விட்டு யுத்தம் செய்ய வேண்டுமென்று செய்த ஸ்ரீ கிருஷ்ணபகவானின் உபதேசத்தையும் பார்க்கவேண்டும்.

முழு யுத்தம்.

இன்று நடக்கும் யுத்தத்தைக் கவனிக்குமளவில், புராணங்களில் சொல்லப்பட்ட மஹாயுத்தங்கள் யுத்தங்களே அல்ல, சமாதானங்களென்றே சொல்ல வேண்டும். தேசங்களிலுள்ள முக்கியமான சேனைகள் ஒரே போர்க்களத்தில் கலந்து யுத்த முறைப்படி சண்டைகள் செய்தன. ஒவ்வொருவரும் தன் தன் தைரியத்தினால் ஜயம் அடைந்தார்கள். யுத்தங்கள் சில நாட்கள்தான் நடந்தன. பொதுஜனங்கள், விருத்தாப்பியர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் இவர்கள் தாக்கப்படவில்லை. நம் நாளில் நடக்கும் யுத்தங்கள் எவ்வளவு மாறுபட்டிருக்கின்றன. நவீன நாகரீகமும், நாம் பெருமை பாராட்டிக்கொள்ளும் முன்னேற்றமும், அறிவின் விசாலமும், படிப்பின் விஸ்தாரமும், கேவலம் குற்றச் செய்கைகளில் முடிந்துவிட்டன. நிரபராதிகளும், திக்கற்றவர்களும், மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்தியாவிலிருக்கும் நாம், நவீன யுத்த முறையில் உபயோகப்படுத்தப்படுகிற,

மரணம் விளைவிக்கக்கூடிய, ஆயுதங்களை ஒரு நிமிஷ நேரம்கூட எதிர்க்கமுடியாது. வேறொரு காரணத்திற்கல்லாதபோனாலும், நம்மிடம் யுத்தம் வாராதபடி தடுக்க வேண்டுமென்பதற்காகவே, நாம் தாராளமாக நம்மால் இயன்ற அளவு பிரிட்டனுக்கு உதவி புரியவேண்டும்.

மதராஸ் சம்பவத்தின் ஞாபகம்.

அகஸ்மாத்தாய் சிறிதுநேரம் மதராஸுக்கு விஜயம்செய்த எம்டன் கப்பல், நகரத்தில் உள்ளவர்களையும், அதற்கு சமீபத்தில் உள்ளவர்களையும் எப்படிக் கலங்கச் செய்தது என்று எனக்கு நன்ருய் ஞாபகம் வருகிறது. எண்ணெய் நிலயங்கள் தீப் பற்றி எரிந்தன. அதற்கு பயந்து ஜனங்கள் ஊரைவிட்டு ஓடினார்கள். மிகவும் முக்கியமானதும் விலையுயர்ந்ததுமான சாமான்களை மட்டும் எடுத்துக்கொண்டு, மற்றவைகளை விட்டுவிட்டு, ஏராளமான மனிதர்களும், ஸ்திரீகளும், ரயில் வண்டிகள் நிறைய சில நாட்களில் சுத்துவட்டை கிராமங்களுக்குச் சென்ருர்கள். ஒவ்வொரு வீட்டிலும் பீதி நிரம்பியிருந்தது. ஒவ்வொருவர் முகத்திலும் திகில் குடிகொண்டு இருந்தது. இது ஒரு பரிதாபகரமானதாகவும், விசனிக்கத்தக்கதாகவுமான காக்ஷியாய் இருந்தது. நாங்கள் அதை ஒரு மணி கூட தாங்க முடியவில்லை. சாதாரணமான வாழ்க்கை அஸாத்யமாயிற்று. பிரிடிஷ் தீவுகளின் ஜனங்கள் தங்கள்மீது சரமாரியாகக் குண்டுகள் விழுந்து கொண்டிருக்கும்பொழுது, தங்களுடைய மனோநிலை தளர்ச்சியடையாமலும், தைரியத்தை விடாமலும் எப்படியிருக்கிருர்களென்பது விந்தையே! அவர்களின் மனோதிடம் ஒன்று மட்டுமே உலகத்தில் அவர்களுக்குக் கண்ணியத்தையும், அநுதாபத்தையும் உண்டாக்குகிறது.

பிசகுதல் கூடாது.

பிரிட்டன் இந்த மிகக்கொடூரமான யுத்தத்தில் ஈடுபட்டுத் தவிக்கும்பொழுது, அதற்கு இன்னும் அதிகக்கவலையைக் கொடுத்து, அதன் கஷ்டங்களை அதிகரிக்கச் செய்வதானது, நாம் அத்துடன் இவ்வளவு பழகினதற்கு அழகல்ல. இந்த நெருக்கடியான நிமிஷத்தில் நாம் பிரிட்டனைக் கைவிடக்கூடாது. பிரிட்டனுடைய கஷ்டங்களை நாம் இரக்கமில்லாமல் பார்த்துக்கொண்டிருந்தோமென்று தேச சரித்திரத்தில் எழுதும்படி விடக்கூடாது. பிரிட்டன் தற்பொழுது நம்முடன் முழு ஒற்றுமையாக இல்லை என்ற காரணத்திஞல், அது ஜயமடைந்த பிறகுகூட நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்ருது என்ற எண்ணம் இல்லாமல், அதற்கு நாம் உதவிசெய்வதுதான் மிகவும் பெருந்தன்மையான காரியமாகும்.

நம் அரசர் கட்டளை.

இந்த ஸமஸ்தானத்தில் நாம் என்ன செய்ய வேண்டுமென்பதை நம் அரசர் நமக்குக் கட்டளையிட்டிருக்கிருர். நாம் எல்லோரும் ராஜபக்தியுள்ளவர்கள். நம் அரசர் விருப்பமும், நம் விருப்பமும் ஒன்ருகவே இருக்கவேண்டும். இந்த யுத்தத்தில் எல்லாவித முறைகளிலும் பிரிட்டனுக்கு நாம் உதவி செய்யவேண்டுமென்று

நமக்குக் கட்டளையிட்டிருக்கிறுர். நமக்கு எவ்வித கடுமையான பிரச்னையும் இல்லை. நமக்கு நம் அரசர் காண்பித்திருக்கும் வழி பத்திரமான வழியாதலால், அதையே கடைப்பிடித்து நடப்பதுதான் சிலாக்யமானதாகும்.

எதிர் நோக்கம்.

இப்பொழுது இருக்கும் சிக்கல்களிலும், பிரிடனுக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பொறுப்புகளின் மத்தியிலும், பிரிடனிலும், அதன் சிநேகிதர்களிடத்திலும், பிரிடனே ஜயிக்கும் என்ற நம்பிக்கை வளர்ந்துகொண்டே வருகிறது. சிறிய தேசங்களை ஜயித்து, அதிக சண்டையில்லாமல் பிரான்ஸ் தேசத்தைத் தன் ஆளுகைக்குட்படுத்திய ஹிட்லருக்கு, பிரிடனும் அதன் ஜனங்களும் பயங்கரமான எதிரிகளாகத் தோன்றியிருக்கிறுர்கள். அவருடைய தடங்கல் இல்லாத ஜயப்போக்கு இப்பொழுது உண்மையாகத் தடைப்பட்டிருக்கிறது. பிரிடன்மேல் அவர் படையெடுக்கச்செய்த முயற்சிகள் யாவும் முறியடிக்கப் பட்டன. அதுவுமல்லாமல் பிரிடிஷ் ஆகாயப்படையானது, ஜெர்மனியின் ராணுவ பலத்திற்கு அளவிட முடியாத அழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. மற்ற முனைகளிலும் பிரிடிஷ் சமுத்திரப்படை, ஆகாயப்படை, இவைகளின் பலம் உணரப்பட்டுக்கொண்டு வருகிறது. நாஸி உணர்ச்சி சீக்கிரம் ஒழிந்துவிடும் என்று நம்ப பல முகாந்திரங்கள் இருக்கின்றன.

அமெரிக்காவின் அநுதாபம் முற்றிலும் பிரிடனிடத்திலேயே இருக்கிறது. அங்குள்ள தலைவர்கள் பிரிடன் சண்டை செய்வது மனுஷ்ய சமூகத்தைக் காப்பாற்றுவதற்காகவேதான் என்றும், அச்சு தேசங்கள் நீதியையே நிர்மூலமாக்கச்சேர்ந்துகொண்டிருக்கின்றனவென்றும், சிறிதளவும் சந்தேகமில்லாமல் கூறியிருக்கிறுர்கள். அமெரிக்கா உள்ளபடி யுத்தத்தில் ஈடுபடாவிட்டாலும், பிரிடனுக்குத் தங்களாலியன்ற உதவியைச் செய்து வருகிறது. அச்சு தேசங்களின் நடவடிக்கைகளினுல், அமெரிக்காவும் சீக்கிரம் யுத்தத்தில் இழுக்கப்படுமென்ற ஹேதுவில்லாமல் இருக்கவில்லை. குடிஜன ஆக்ஷிக்கு ஜயம் சமீபத்திலேயே இருக்கிறது. இந்தியா பிரிடனுடன் வெகுகாலமாய்க் கொண்டிருக்கும் சிநேகத்திற்கு உண்மையாயும் நம்பிக்கையாயும் இருக்க வேண்டுமென்ற தீர்மானத்தில் சிறிதளவுகூட தடுமாறக்கூடாது.

யுத்தத்தின் பிற்கால நோக்கங்கள்.

பிரிடன் தன்னுடைய யுத்த நோக்கங்களை திட்டமாய் வெளியிடாமலிருந்தபோதிலும், ஒவ்வொரு தேசமும் தன் இஷ்டப்படி செய்துகொள்ள சுயேச்சை அளிக்கப்பட்டு, யாவர்க்கும் அழியாச்சமாதானம் நிச்சயமாய் வழங்கக்கூடிய, ஒரு புதிய உலக முறைமையை ஏற்படுத்த பிரிடன் ஆவல் கொண்டிருப்பதாக ஒரு அபிப்பிராயம் அங்கே இருந்து வருகிறது. யுத்தம் முடிந்தவுடன் உலகில் சுயேச்சை தேசங்களில் ஏற்படப்போகும் ஒரு கட்டுப்பாட்டில் இந்தியாவிற்கு நியாயமான இடம் கொடுக்கப்படமாட்டாதென்ற பயம் நமக்கு ஏற்பட அவசியமில்லை.

எதுவாயிருந்தாலும், எதிர் காலத்தைப்பற்றி ஆராய்வதில் நம்முடைய காலத்தையும் சக்தியையும் செலவழித்து விடவேண்டாம். எதிர் காலத்தில் என்ன நிகழுமென்பதை ஒருவரும் நிச்சயமாக முன்னறிய முடியாது. தற்கால அபாயத்தை விலக்கி, மனுஷ்ய சமூகம் இன்னும் அழிந்து விடாமல் காற்பதே, அச்சமூகத்திற்கு நன்மை விரும்பும் நம்முடைய முக்கிய அலுவலாயிருக்க வேண்டும்.

இந்தியாவின் உதவி.

நாம் சிறிதும் தயக்கமில்லாமல், பிரிடனுக்கு நாம் செய்யும் உதவியை நிறுத்தி வைக்கக்கூடாது. நாம் அநேக வழிகளில் உதவி புரியலாம். இந்திய போர்வீரன் இதற்குமுன் தன் வீரச்செயல்களினால் கீர்த்தி பெற்றிருக்கிறதுடன், அநேகக் கியாதிவாய்ந்த அருஞ்செய்கைகளையும் செய்திருக்கிறான். சண்டை செய்யும் வல்லமையில் மற்ற தேசங்களின் போர்வீரர்களுக்கு இவன் சளைத்தவனல்ல. அவனுடைய பொறுமை மெச்சத்தகுந்தது. இந்திய ஆண்மை தகுதியாயும், காலதாமதமில்லாமலும் பயிலுவிக்கப்பட்டால், எண்ணிக்கையிலும் திறமையிலும் எதிரியின் மனதில் திகிலை உண்டாக்கக்கூடிய ஒரு பெரும் சைன்யத்தை இந்தியா அளிக்கக்கூடுமென்று யாவரும் நிச்சயமாய் எதிர்பார்க்கலாம்.

இந்தியாவின் இயற்கை ஆதாரங்களை அறிந்தவர்கள், அவைகளை சிரத்தையாய் ஆராய்ச்சி செய்தால், இந்தியாவின் சிரேஷ்ட சிநேகிதனை பிரிடனுக்கு நிரந்தர உதவி செய்வதற்கான பொருள்களை உண்டாக்கக்கூடும். யுத்தத்திற்கான தொழில்கள் இங்கு ஆரம்பித்து, தீவிரமாய் நடத்த மகத்தான பிரயத்னங்கள் செய்யப்பட்டு வருகின்றன. பிரிடனுக்கு யுத்தத்தை நடத்துவதற்கான நிலை பொருளான உதவியை கூடிய சீக்கிரம் இந்தியா செய்யப்போகிறது.

ஸமஸ்தானத்தின் உதவி.

நாம் பிரயாசையில்லாமலும், காலதாமதமில்லாமலும் ஒரு உதவி செய்யக் கூடும். நம்மவர்களில் படித்தவர்கள், யுத்தத்தின் நோக்கத்தைப்பற்றியும் அதன் முடிவைப்பற்றியும், ஜனங்களின் மனதில் குடிகொண்டிருக்கிற சந்தேகத்தை விலக்கி, உண்மையான உணர்வை நிச்சயமாய் அவர்களுக்குப் புகட்டவேண்டும்.

இத்துறையில் யுத்த அறிக்கை நிலயம் தீவிரமாய் உழைத்து வருகிறது. அந்நிலயம் வெளியிடும் ஒவ்வொரு துண்டுப் பத்திரிகையையும் நான் கவனத்துடன் படித்து, அவைகள் விளக்கும் விஷயங்களையும் நெருங்கிக் கவனித்து வருகிறேன். விஷயங்கள் ஜாக்கிரதையாய் திரட்டப்பட்டு நேர்த்தியான உருவத்தில் வழங்கப் பட்டு வருவது மகிழ்ச்சியை ஊட்டுகிறது. யுத்தத்தின் சமீப தோற்றங்களை ஜனங்களுக்கு அறிவிக்கவும், நாம் யுத்தத்தில் திட்டமாய் ஜயித்துக்கொண்டு வருகிறோம் என்ற நம்பிக்கையை அவர்கள் மனதில் எழுப்பவும், கல்விப்பயிற்சியுள்ளவர்களால் ஜனங்களுக்கு உபந்யாசங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இச்சமஸ்தானத்து ஆதாரங்கள் யாவும், சிறிதும் தயக்கமில்லாமல், பிரிட்டனுக்கு அளிக்கப்பட்டிருப்பதுடன், யுத்த முயற்சியில், அது இந்தியாவின் மற்ற பாகங்களுக்குப் பின்னடைந்திருக்கவில்லை.

தளர்ச்சி கூடாது.

ஆனல் நிலைமை இன்னும் கவலைக்கிடமாயிருக்கிறது. சண்டை ஜயிக்கப்படும் வரை நாம் உதவி செய்துகொண்டே இருக்கும்படி அவ்வளவு முக்கியமாயிருக்கிறது. பிரிடிஷார் தங்கள் யாவற்றையும் ஈடுபடுத்தியிருக்கிறார்கள். நாமும் அவ்வண்ணமே செய்யவேண்டும்.

நாம் பிரிட்டனுடைய கைகளைப் பலப்படுத்தச்செய்யும் முயற்சிகளினல், ஒரு மேம்பாடான காரணத்தை ஆதரித்தும், இவ்வகையில் நாம் நமது கடமையை செய்யத்தவறுவதனல், இப்பூமியில் தர்மம் தலைசாய்க்கக் காரணமாகவும் ஆகிறோம் என்ற உணர்ச்சியானது, நம்மை மேலும் மேலும் பரித்யாகம் செய்யத் தூண்டுகிறது. அதனல், இந்த யுத்தத்தில் பிரிட்டனின் கவலையிலும் துன்பத்திலும், அதற்கு அதன் பற்பல சிநேகிதர்களால் செய்யப்பட்டிருக்கும் உதவிகளை முடிவில் கணக்கெடுத்துப் பார்க்கும்பொழுது, இந்தியாவானது, தான் எப்பொழுதும் சிலாகித்து வந்திருக்கும் ஆதரவு, பரித்யாகம் என்கிற இந்த பெருங்கொள்கைகளுக்கிணங்க, தனது வீதத்தை மேன்மையாகவும் தயாளமாகவும் செய்திருக்கிறது என்று கூறப்படும்.

வார யுத்தச் செய்திகள்.

(16—10—40 லிருந்து 23—10—40 வரை).

பிரிடிஷ்-விமான எதிர்ப்புகள்.—அக்டோபர் 18-ம் தேதி காலேயோடு முடிவான வாரத்தில் ஜெர்மன் துறைமுகங்கள், கரை-பாதுகாப்பு-நிலயங்கள், கப்பல்கள் இவைகள் மேல் 58 தடவைகள் பிரிடிஷ் விமானங்கள் தாக்கின; ரயில்வே ஜங்ஷன்கள், பண்டகசாலேகள், பாலங்கள் 21 தடவைகள் தகர்க்கப்பட்டன; தொழிற்சாலேகள் 16 தடவைகளும், விமான நிலயங்கள் 20 தடவைகளும், எண்ணெய் சுத்திசெய்யும் சாலேகள் 16 தடவைகளும், பொது ஸ்தலங்கள் 10 தடவைகளுக்கு மேலும் தகர்க்கப்பட்டன.

டான்ஸ்கிரெஸ்டாஸ் வாயு (gas)-உற்பத்திசாலே, டெம்பிளாப் ரயில்வே நிலயங்கள் யந்திர-சக்தி உற்பத்திச்சாலே முதலியவை, லெர்டர் ரயில்வே ஸ்டேஷன், பெர்லின் ரயில்வே பண்டகசாலே, போலிட்ஸ் எண்ணெய் தொழிற்சாலே முதலியவை எதிர்க்கப்பட்டன. போலிட்ஸில் எண்ணெய் தீப்பிடித்துக் கொண்டு மணிக்கணக்காக எரிந்தது. இந்த இடத்துக்குப்போக பிரிடிஷ் விமானங்கள் 1,300 மைல்தூரம் பிரயாணம் செய்தன. இந்த எண்ணெய் தொழிற்சாலேயில் வருஷத்திற்கு 1,000,000 மெட்ரிக் டன் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. இது தீப்பிடித்து எரிந்தபோது ஜ்வாலே 100 மைல் தூரத்துக்கப்பால் திரும்பி வரும்பொது பிரிடிஷ் விமானிகளுக்குத் தெரிந்தது.

கீல் நான்கு இரவுகள் எதிர்க்கப்பட்டன. அங்குள்ள டியூட்ஸ்வர்க், கொர்டனியா, கப்பல்-கட்டும் துறைகளும், யுத்தக் கப்பல்களும் தகர்க்கப்பட்டன. எஸ்ஸனிலுள்ள குருப்ஸ்-தொழிற்சாலே இரண்டு தடவைகள் எதிர்க்கப்பட்டன.

நடப்பு வாரத்தில், மழையினுலும், மேகங்கள் கீழிறங்கி விட்டதாலும், பனிபேயும் தருணமாயிருந்ததாலும் விமானங்கள் சுலபமாய்ப் போவதற்கில்லாவிட்டாலும், பிரிடிஷ் விமானங்கள் ஜெர்மனியையும் இதாலியையும் சேர்த்துத் தாக்கின. இதாலி 1,600 மைல் தூரத்திலிருந்தபோதிலும், இடையில் ஆல்ப்ஸ் பர்வதத்தைத் தாண்டவேண்டியிருந்தும், பிரிடிஷ் விமானங்கள் நடுவழியில் நிற்காது இதாலியிலுள்ள டியூரின் நகரம் வரையில் சென்று போர்செய்து திரும்பின. இதனுல் எதிரிகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் அதிகம். உதாரணமாக, 18-ம் தேதி எதிர்ப்பில் பெர்லின் முழுவதும் வெடிகளின் புகையால் சூழப்பட்டது; அங்குள்ள தலே தபாலாபீஸ் இடிக்கப்பட்டது, டார்ட்மண்டு-எம்ஸ், மைட்லாண்டு கால்வாய்கள் பழுதுபட்டன. இதோடு, கீல், ஹாம்பர்க் ஸ்தலங்கள், வியூனன் அலுமினியம் தொழிற்சாலே, டார்ட்மண்டு—தொழிற்சாலே, டியூனிஸ்பர்க்—துறைமுகங்கள் முதலான இடங்கள் எதிர்க்கப்பட்டன. 21-ம் தேதியன்று பெர்லின் 6-மணி நேரம் தகர்க்கப்பட்டு, 200 டன் குண்டுகள் போடப்பட்டன.

இந்த எதிர்ப்புகளால் இந்த வாரத்தில் 9 ஜெர்மன்-ரேடியோ நிலயங்கள் வேலை செய்யவில்லை. ஆகையால் இங்கிலீஷில் ஒலிபரப்பும் ஜெர்மன் நிலயத்தை 300 மைல் கிழக்கே, போலண்டு—எல்லைப்புறத்திலுள்ள பிரஸ்லோவுக்குக் கொண்டுபோய்விட்டார்கள். 200,000 ஜெர்மன் குழந்தைகள் ருமேனியாவில் பத்திரமாய்வைக்க ஜாகைகள் தயாராகின்றன.

பிரிடனைப் படையெடுக்கும் ஜெர்மன் விமானங்கள் பிரிடிஷ் பீரங்கிகளுக்குப் பயந்து 30,000 அடி உயரத்துக்குமேல் பறந்துவருகின்றன. லண்டன் எதிர்க்கப் பட்டு வந்தாலும், டெல்-எய்ரியன் அங்கத்தினர் ஒருவர் சொல்லுவதுபோல ஏதோ சிறு காயப்பட்டிருக்கிறதே ஒழிய நகரத்தின் மாக்ஷிமை குறையவில்லை, நகரவாசிகளும் சந்தோஷமாயிருக்கிறார்கள். திங்கட்கிழமை தினத்து ஒலிபரப்பில் பிரத மந்திரி சொன்னதாவது:—"ஹிட்லர் லண்டனை அடியோடு அழித்து விடுவதாகச் சொல்லுகிறார்: அவருடைய விமானங்கள் வந்து போய்க்கொண்டு தானிருக்கின்றன. ஆனால் லண்டன்-வாசிகள் பின்வாங்கவில்லை. பிரிடிஷ் விமானங்கள் வெற்றியுடன் எதிர்க்கின்றன. வெகு நாளாய்ச் சொல்லிக்கொண்டு இருக்கும் பிரிடன்மேல் படையெடுப்பு இன்னுமேற்படவில்லை. ஆனால் நாங்கள் அதற்கும் தயாராயிருக்கிறோம். கடலைத்தாண்டும்போது ஜெர்மன் படைகள் கடலில் அழியும். அவர்களை விழுங்க மீன்கள் காத்துக்கொண்டிருக்கின்றன. இந்த வருஷத்தில், ஏதோ சில்லரையாக ஏற்பட்ட சில நஷ்டங்களைத்தவிர கடல் ஆதிபத்தியம் நமக்குக் குறையவில்லை. அடுத்த வருஷம் ஆகாய—ஆதிபத்தியமும் நமக்கு வந்துவிடும்".

இதை ஒத்து அமெரிக்க நிருபர் மிஸ்டர் க்வெண்டின் ரெயினால்ட்ஸ், சர்ச்சில் தலைமையிலிருக்கும் பிரிடனில் தைர்யத்துக்கொரு குறைவுமில்லையென்று சொல்லு கிறார். பிரிடிஷ் மக்களின் தைர்யத்தை ஜெர்மனிகூட மெச்சிக்கொள்ளுகிறது. ஜெர்மனி நிருபர் சொன்னதாக இதாலிய சமாசாரமொன்று 'இங்கிலாந்திலுள்ள 47,000,000 பிரிடிஷ் மக்களும், 47,000,000 சர்ச்சிலாக இருக்கிறார்கள்' என்று சொல்லுகிறது.

கப்பல்-சண்டைகள்.—கிராப்-ஸ்பீ யுத்தத்தில் ஏற்கனவே வெற்றி பெற்ற ஏஜாக்ஸ் என்ற பிரிடிஷ் சண்டைக்கப்பல் மறுபடியும் இந்த வாரத்தில் ஒரு வீரச் செயல் செய்தது. ஸிஸிலிக்கு 80 மைலுக்கப்பால், 3 இதாலிய டிஸ்டிராயர் கப்பல்களைத்தாக்கி இவைகளில் இரண்டைக் கவிழ்த்துவிட்டது; மூன்றாவது கப்பல் ஓட்டம் பிடித்தது. சற்று நேரம் வேறு நாலு நாசகாரிகளும், ஒரு குரூஸரும் தென்பட்டன. இவைகளில் ஒரு பெரிய நாசகாரி பழுதாக்கப்பட்டது; மற்றவை இருட்டில் மறைந்துவிட்டன. மறுநாள் காலையில் பழுதான நாச காரி கண்டுபிடிக்கப்பட்டு, தாக்கி கவிழ்க்கப்பட்டது. அதிலிருந்தவர்களைக் காப்பாற்ற, சமீபத்திலிருந்த யார்க் என்ற யுத்தக்கப்பல் தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்தைக்கூட கவனியாது, இதாலிய-வியாபார-வயர்லெஸ்-நிலயங்களுக்குச் செய்தி அனுப்பி, உடைந்த கப்பல்களிருக்கும் இடத்தைக் காண்பித்து உதவி புரியக் கேட்டுக்கொண்டது. மத்தியதரைக் கடலில் பாராக்கொடுத்து நின்ற ஒரு

ஸுண்டர்லண்ட்-விமான-படகு ஒன்று, இதாலிய-ஆஸ்பத்திரிக் கப்பலுக்கு வழி காட்டியது. இதன் பிறகு பிரிடிஷ்-கப்பல்களை எதிர்க்க வந்த இதாலிய-விமானங் களில் நாலு உடைக்கப்பட்டன. பிரிடிஷ் நீர்மூழ்கிகள் பிரவேசித்து ஸவோன ராணுவ நிலயத்தையும், நேபிள்ஸ், பெங்காஸி துறைமுகங்களிலுள்ள வியாபாரக் கப்பல்களையும் தாக்கின.

14-ம் தேதி, பிரிடிஷ் கப்பல்களால் எதிர்க்கப்பட்டு டன்கர்க்-துறைமுகம் அதிக சேதப்பட்டது.

16-ம் தேதி மத்தியதரைக்கடலில் நடந்த ஒரு சண்டையில் லிவர்பூல் என்ற ஒரு பிரிடிஷ் யுத்தக்கப்பல் சற்றுப்பழுதுபட்டு, பத்திரமாய், பழுது பார்க்கப்பட்டு வருகிறது.

17-ம் தேதி, பிரெஸ்டுக்கு அருகாமையில் 4 ஜெர்மன் நாசகாரிகள் வெளி வந்தன. பிரிடிஷ் குரூஸரால் சுடப்பட்டு, மற்ற பிரிடிஷ் கப்பல்களாலும், விமானங்களாலும் விரட்டப்பட்டு துறைமுகத்துக்குள் போய்ஒளிந்து கொண்டன. இந்த அவமானத்தை மறைக்க, இதைச்சிறு சண்டையென்றும், பிரிஸ்டல் கால் வாயில் நடந்ததாகவும் ஜெர்மனி பொய் சொல்லுகிறது.

பால்கன்ஸ்.—பால்கன் நாட்டுச் செய்திகள் இன்னும் மூடுமந்திரமாய்த் தானிருக்கின்றன. கான்ஸடன்ஸாவில் ஜெர்மன் நீர்மூழ்கிகள் வந்ததாகவும், காலாட்ஸில் ஜெர்மன் விமானங்கள் வந்ததாகவும், பிளோயெஸ்டா எண்ணெய் நிலயங்களுக்கு ஜெர்மன் துருப்புகள் வந்து விட்டதாகச் சொன்ன செய்திகள் எல்லாம் இப்பொழுது மறுக்கப்படுகின்றன. ருமேனியாவில் இப்போது 1500 துருப்புகள்தான் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவைகள் கேந்திரஸ்தானங் களில் வைக்கப்பட்டிருக்கின்றனவாம். சைன்யங்கள் பிடித்துக்கொள்ளா விட் டாலும் ருமேனியா படிப்படியாக ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குள் வந்து கொண் டிருப்பது உண்மையே.

ஜெர்மனிக்கும், யுகோஸ்லேவியாவுக்கும் ஒரு வியாபார ஒப்பந்தம் முடிவாகி இருக்கிறது. இதன்படி வியாபாரப் பொருள்களில் விலைகள் நிர்ணயிக்கப் படுமாம். இதெல்லாம் யுகோஸ்லேவியை வாயில் போட்டுக்கொள்ள ஆரம்பம். முதலில் வியாபார ஆதிக்கம், பிறகு ராஜீய-ஆதிக்கம், ராணுவ-ஆதிக்கம், கடைசி யாக ரகஸ்ய-போலீஸ்-ஆக்ஷி.

நடு-கீழ்-நாடுகள்.—பிரிடிஷ் நிலைமையைப் பரிசோதிக்க வட ஆபிரிக்காவில் இதாலியத் துருப்புகள் இருமுறை அதாவது, டொப்ருக்கிலிருந்தும், ஸோமாலி லாண்டிலிருந்தும் வெளிக்கிளம்பின. பிரிடிஷ் துருப்புகள் எதிர்த்தவுடன் ஓடி விட்டன.

பிரிடிஷ்-யுத்த மந்திரி மிஸ்டர் ஈடன் எகிப்துக்கு வந்து சேனாதிபதி ஜென்ரல் வேவலோடு யுத்த நிலைமையைச் சர்ச்சை செய்தார். இவர் வந்ததில் எகிப்த் ஜனங்களுக்கு வெகு திருப்தி.

இந்த வாரத்தில் முகம்மதியர்களுக்கு விரோதமாக இதாலி பெரிய ஒரு அநியாயத்தைச் செய்து விட்டது. ரம்ஸான்-நோன்பின்போது, முகம்மதிய நாடுகளில் வெடிகுண்டுகளைப் போடுவதில்லை என்று முஸோலினி வாக்களித்து விட்டு, அதற்கு விரோதமாக P4 விமானங்கள் மெக்காவுக்குச் சமீபத்தில் பறந்து, ஸவுடி-அரேபியாவையும், பாக்ரீனையும் எதிர்த்தன. இவை நடுநிலை வகித்த நாடுகள். அங்கிருக்கும் எண்ணெய்-நிலயங்களை உடைக்க இந்த அநியாயம் செய்யப்பட்டிருக்கிறது.

தூர-கீழ்-பிரதேசம்.—17-ம் தேதி இரவு பர்மா-ரஸ்தா திறக்கப்பட்டது. இரவு 12-7 மணிக்கு 4,000 லாரிகள் சாமான்களை ஏற்றிக்கொண்டு லாஷியோவில் இருந்து யுனனுக்குப் புறப்பட்டன. அதாவது 772 மைல் பிரயாணத்தை ஆரம்பித்தன. பிரயாணத்தில் ஆபத்துண்டு. இன்னும், லாஷியோவில் 100,000 டன் யுத்த தளவாடங்களும், 500,000 டன் யுத்த தளவாடங்கள் ரங்கூனிலும், எடுத்துப் போகத் தயாராயிருக்கின்றன. ஒரு கும்மிங்-செய்திப்படி 52 ஜப்பான் விமானங்கள் பிரெஞ்சு-இந்து-சைனாவிலிருந்து புறப்பட்டு, யுனல், இந்து-சைனா ரெயில்வே, பயோஷான், மீகாங்-பாலம் முதலானவைகளை எதிர்த்ததாகச் சொல்லுகிறது. சூசி, பிரங்ஸின், நான்லிங் முதலிய இடங்களில் வெற்றி பெற்றதாக சீனாவிலிருந்து செய்தி விடுத்திருக்கிறது.

ஜப்பான் செய்துகொண்டிருக்கும் ஒப்பந்தத்தைக் கண்டிக்க அமெரிக்கா, சீனாவுக்கு, புதிதாக 50,000,000 டாலர் கடன் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறது. ஏற்கனவே 250 லக்ஷம் டாலர் கடன் கொடுத்திருக்கிறது.

சமீபத்தில், ஜப்பான், டச்-ஈஸ்ட் இண்டீஸ் பிரதிநிதிகள் படேவியாவில் கூடி சமரஸ-அறிக்கையொன்று விடுத்திருக்கிறார்கள். ஜப்பானுக்கு வேண்டிய எண்ணெயில் 100-க்கு 40 பங்கு படேவியாவிலிருந்து வருவதை ஊர்ஜிதப் படுத்திக் கொள்ளுவதற்காக இந்தப் பேச்சுகள் நடக்கின்றன. இதுவரையில் பிரயத்தினம் பலித்ததாகக் காணோம்.

அமெரிக்கா.—ஜெர்மனியால் வரக்கூடிய ஆபத்து என்னவென்று அமெரிக்காவுக்கு இப்பொழுது நன்றாய்த் தெரிகிறது. 16-ம் தேதி ஒலிபரப்பில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் சொன்னதாவது: 'தற்காப்பின் அவசியமானது இதரர்களுடைய அக்கிரமத்தால் நமக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. சைன்யங்களோடு நிற்காமல் நகரவாசிகளையும் எதிர்க்கும் யுத்தத்தை உற்பத்தி செய்த ஜெர்மனியால் இந்த விபத்துகள் உண்டாயிருக்கின்றன. ஸ்வதந்திர-ஜனங்கள் தற்காப்பு-வழிகளைத் தேடவேண்டியிருக்கிறது." யுனைடெட்-ஸ்டேட்ஸ் பிரதிநிதியாக பிரான்ஸிலிருந்த மிஸ்டர் புல்லிட் என்பவர் மூவரசு-உடன்படிக்கையினால் ஜப்பான் அமெரிக்காவை சண்டைக்கிழுக்கிறதென்றும், இது புது யுக்தியென்றும், இது போகப்போக யுத்தத்தில் முடியுமென்றும் எச்சரிக்கை செய்து பின்வருமாறு சொல்லுகிறார்:—'மூவரசு-ஒப்பந்தமானது அமெரிக்காவின்மேல் போட்ட வெடி-குண்டாகும். குண்டு தாமதித்து வெடிக்கும். எப்பொழுது வெடிக்குமென்று

தெரியாது. இந்த சர்வாதிகாரிகளைச் சமாதான வழியில் திருப்தி செய்யமுடியா தென்பது ஐரோப்பிய அனுபவம். நாம் இடம் கொடுத்தால் அவன் மடத்தைப் பிடுங்குவான். பிரிடன், பிரான்ஸ், ஆஸ்திரியா, ஸெகோ-ஸ்லவேகியா, பெல்ஜியம், ஹாலண்ட், டென்மார்க்-தேசங்களெல்லாம் சமாதானப்படுத்தச் செய்த முயற்சிகளெல்லாம் வீணாயின. தூங்குகிறவர்களை எழுப்பலாம்; விழித்துக் கொண்டிருப்பவனை எழுப்ப முடியவில்லை. சமாதானம் செய்துகொள்ள எண்ணம் இல்லாதவர்களோடு சமாதானமென்பது சாத்தியமில்லாதது. இதாலி தயவுக் காகவோ, ஜெர்மன் தயவுக்காகவோ, பிரிடனுக்குச் செய்யவேண்டிய உதவியைக் குறைக்கக்கூடாது. பிரிடிஷ்-சாம்ராஜ்யத்தை அழிக்க நினைக்கும் ஜெர்மனியோடு சமாதானப் பேச்சென்பதில்லை. சீனாவுக்குக் கடன் கொடுத்து உதவிசெய்ய வேண்டியதுதான். ஜெர்மனி, இதாலி, ஜப்பான் தேசங்களை சமாதானம் செய்வது இதுவரையில் ஒருவருக்கும் சாத்தியப்படாத காரியம்."

பிரான்ஸ்.—'ஓரான்,' 'டாகார்' மனஸ்தாபங்களிருந்தாலும், பிரெஞ்சுக் காரர்களுக்கு பிரிடனிடத்து விசுவாஸம் அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது. எம். லாவாலும், எம். படாயினும் இங்கிலாந்துக்கு விரோதமாயிருந்தாலும், பிடேன் மனம் மாறிவருகிறது. 21-ம் தேதி செய்த ஒலிபரப்பில் மிஸ்டர் சர்ச்சில் பின் வருமாறு பிரான்ஸுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்:—

"பிரான்ஸ் வாசிகளே! தைர்யத்தைக் கைவிடாதேயுங்கள். பிரெஞ்சு-சைன் யங்களைக்காட்டிலும், ஜெர்மன் துருப்புகள் யானை சண்டையில் 3 பங்கும் மாண்ட், மிரால் சண்டையில் 6 பங்கு அதிகமாய் இருந்தபோதிலும் உங்களுடைய வீரனாகிய நெபோலியன் ஜெர்மானியரை ஜயிக்கவில்லையா? பிரான்ஸ் உயிரிழந்து, உலகத்திலிருந்து போய்விட்டதாக நான் நினைக்கவே மாட்டேன். ஹிட்லருடைய அட்டூழியங்களுக்கு சிக்ஷை சீக்கிரம் வரப்போகிறது. என் ஜீவிய-நாளில் நான் அதைப்பார்க்கத்தான் போகிறேன். யுத்தம் முடிந்துவிட வில்லை. ஆனால் சீக்கிரம் முடிவுக்கு வரும். அமெரிக்காவும், நாங்களும் ஜெர்மன் மிருகத்தை வேட்டையாடுகிறோம். பதுங்கியிருக்கும் இடம் கண்ணுக்குப்படுகிறது. மிருகம் எங்களைக் கொல்லாவிட்டால், நாங்கள் அதைக் கொல்லுவது நிச்சயம். ஆகையால் நம்பிக்கை இழக்கவேண்டாம்.

"சும்மா அமருங்கள். சூரியன் சீக்கிரத்தில் உதயமாவார். தூங்கி விழித் தால் பலமடைவீர்கள். இந்த மகத்தான போரில் வீரர்கள் வெற்றியுடன் சண்டை செய்கிறார்கள். இதிலிருந்து பிரான்ஸுக்கு க்ஷேமம் பிறக்கப்போகிறது. ஸர்வ ஜனங்களுக்கும் க்ஷேமமும் ஸ்வதந்திரமும் இதிலிருந்து ஏற்படப்போகிறது உலகத்தாருடைய க்ஷேமம் முன்னேறட்டும்".

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
14—10—40 (திங்கட்கிழமை).			
	டான்ஸி கெர்ஸ்ட்ராஸி (Danzi Gerstrasse) லிருக்கும் ஒரு பெரிய காஸ் (gas) உற்பத்தி ஆலை.	......	எங்கும் பெருந்தீ சூழ்ந்தது.
	டெம்பிள்ஹாப் (Templehof) ரயில்வே சாமான் கிடங்குகள், இன்னும் மற்ற ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்கள்.	......	ராணுவ முக்யத்வம் வாய்ந்த இடங்களில் குண்டுகள் விழுந்தன.
	லேர்டே (Lehrte) ஸ்டேஷனுக்கருகிலுள்ள ரயில் வண்டிகள் நிற்கும் இடங்கள்.—பெர்லினி (Berlin) லும், அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும்.	......	பலத்த சேதம்.
	எண்ணெய் ஆலைகள்.—ஸ்டெட்டின் (Stettin), போஹ்லென் (Bohlen), ரோதா (Rotha), மாக்டீபர்க் (Magdeburg), மிஸ்பர்க் (Meisburg).	......	தீப்பிடித்தன.
	கப்பல் நிற்குமிடங்கள்.—ஹாம்பர்க் (Hamburg), எம்டன் (Emden), டென் ஹெல்டர் (Den Helder), லாஹவேர் (Le Havre).	......	சேதம் அதிகம்.
	ரயில் பாதைகள்.—காட்டிங்கன் (Gottingen), லிங்கன் (Lingen), ஹானோவர் (Hanover).	......	போக்கு வரத்து சாதனங்கள் தடைபட்டு விட்டன.
	பல தொழிற்சாலைகளும், விமான நிலயங்களும்.	நஷ்டமில்லை.	......
15—10—40. (செவ்வாய்க்கிழமை).			
	கடற்படை நிலயங்கள்.—கீல் (Kiel), ஹாம்பர்க் (Hamburg).	......	கப்பல்கள் சேதமாயின.
	எண்ணெய் ஆலைகள்.—கெல்ஸன்கர்ச்சன் (Gelsenkirchen), மாக்டீபர்க் (Magdeburg), ஸால்ஸ்பர்கன் (Salsbergen), கீல் (Kiel).	......	எல்லா இடங்களிலும் தீப்பிடித்தன.

தேதி. பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
15—10—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.		
சாமான் கிடங்குகள்.—ஷீவர்ட் (Schwerte) ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest).	......	......
ரயில்வே ஜங்ஷன்கள்.—நார்ட்ஹாஸன் (Nordhausen), லால் (Lalle).	......	......
அநேக தொழிற்சாலைகள்.—(வெடிமருந்து செய்யும் ஆலைகள், விமான உற்பத்திச் சாலைகள், மின்சார உற்பத்தி ஆலைகள்).	......	......
கப்பல் நிற்குமிடங்கள்.—ஹாம்பர்க் (Hamburg), டூயிபர்க் (Duisburg).		
க்ரேவன்ப்ராயிக் (Grevenbroich), கோலோன் (Cologne), ஸ்கோனேபக் (Schonebeck), நியூஹால்டென்ஸ்லெபென் (Neuhaldensleben), லூனென் (Lunen), டஸ்ஸல்டார்ப் (Dusseldorf).		
முக்கியமான 20 ரயில்வே ஸ்டேஷன்கள்.—ஜெர்மனி (Germany).	......	சேதமாயின.
சாமான் ஏற்றிச்செல்லும் ரயில் வண்டிகள்.—லூனென் (Lunen).	......	தகர்க்கப்பட்டன.
விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany) ஹாலந்து (Holland).	......	......
பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள்.—காப் க்ரிநே (Cap Gris Nez).		தகர்க்கப்பட்டன.
கப்பல் நிற்குமிடங்கள்.—டூயெட்ஸ்ச் (Duetsch), வெரட் (Weret), டென் ஹெல்டர் (Den Helder), ப்ளஷிங் (Flushing), ஸீப்ரக் (Zeebrugge), கலே (Calais), புலாயின் (Boulogne), லாஹவேர் (Le Havare).		தீப்பிடித்தன. தவிடுபொடியாக்கப்பட்டன.
சாமான் கிடங்குகள், இருப்புப்பாதைகள்.—ஆண்ட்வர்ப் (Antwerp), டெர்ளு (Derna), பென்காஸி (Benghazi), டொப்ருக் (Tobruk).		

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
15—10—40. (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.			
	சிறிய துறைமுகம், ரயில்வே ஸ்டேஷன், ரயில் வண்டிகள் நிறுத்திவைக்கும் இடங்கள்.—டெட்ரியா (Dedria).	......	தீப்பிடித்தது.
	சைன்யங்கள் வசிக்கும் இடங்கள், ராணுவ சாதனங்கள்.—பார்டியா (Bardia), காபுஸ்ஸோ (Capuzzo)க் கோட்டை, ஸோலம் (Sollum).		
	கட்டடங்கள்.—டிரிடாவா (Diredawa). ...	......	சேதமாயின.
	ராணுவங்கள் வசிக்குமிடங்கள்.—அபெல்கார் பெனின்ஸுலா (Abelkar Peninsula), மஸாவா (Massawa).	......	தீப்பிடித்தன.
	3 இதாலிய குண்டுவீசும் விமானங்கள்.—செங்கடலில் (Red Sea).	......	2 விமானங்கள் நாசமாயின.
	விமான நிலயம்.—கூரா (Gura).		
16—10—40. (புதன்கிழமை).			
	கப்பல்கள் நிற்கும் இடங்கள்.—கீல் (Kiel), ஹாம்பர்க் (Hamburg), ப்ரமன் (Bremen), கக்ஸ்ஹாவன் (Cuxhaven).	......	பெருந்தீ சூழ்ந்தது.
	எண்ணெய் ஆலை.—லூனா (Leuna) ...	......	கொழுந்துவிட்டெரிந்தது.
	வெடிமருந்து செய்யும் ஆலைகள், ஒரு மின்சார உற்பத்தி ஆலை.—ஸாக்ஸனி (Saxony).	5 விமானங்கள்.	வெடிச்சத்தம் கேட்டது.
	கப்பல்கள், சைன்யங்கள் வசிக்குமிடம்.—டொப்ருக் (Tobruk)	......	பல கப்பல்கள் சேதமாயின.
	வேவு பார்த்தல்.—அபிஸீனியா (Abyssinia), இதாலியன் ஸோமாலிலாண்டு (Somaliland), மர்ஸா மாத்ரூ (Mersa Matruh)வுக்கு 40 மைல்கள் கிழக்கே ஒரு பிரதேசம்.	நஷ்டமில்லை.	பலத்த சேதம்.
	அபிஸீனியா (Abyssinia) வினுள்ள நெகெல்லி (Neghelli).	நஷ்டமில்லை.	1 விமானம்.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
17—10—40. (வியாழக்கிழமை).			
	பகலில்.—ஒரு மின்சார உற்பத்தி ஆலை.—ப்ரஸ்ட் (Brest).		
	இரவில்.—விமான நிலயம் போக்குவரத்து சாதனங்கள்.—நெகெல்லி (Neghelli).	......	சேதமாயின.
18—10—40. (வெள்ளிக்கிழமை).			
	கப்பல் கட்டுமிடங்கள்.—கீல் (Keil), ஹாம்பர்க் (Hamburg), எம்டன் (Emden), லூபெக் (Lubeck).	......	படுசேதமாக்கப் பட்டன.
	அலுமினியம் தொழிற்சாலை.—லூனன் (Lunen).		
	ஒரு தொழிற்சாலை.—டார்ட்மண்ட் (Dortmund).	......	சேதமாயிற்று.
	கப்பல் கட்டுமிடம்.—டூயிபர்க் (Duisburg).		
	ரயில் பாதைகள், சாமான் கிடங்குகள்.—ஷீவர்ட் (Schwerte), ஆஸ்னுப்ரக் (Osnabruck), டார்ட்மண்ட் (Dortmund).	நஷ்டமில்லை.	தீப்பிடித்தது.
	ரோட்ஸ் (Rhodes) தீவுகள், இன்னும் டோடிகனீஸ் (Dodecanese) தீவுகளில் உள்ள மற்ற இதாலிய நிலயங்கள், விமான நிலயம்—பாரெண்டு (Barentu), டிரிடாவா (Diredawa), ஸோலம் (Sollum), பென்காஸி (Benghazi).	......	அதிகச்சேதம்.
19—10—40. (சனிக்கிழமை).			
	சைன்யங்கள் அணிவகுக்குமிடங்கள்.—ஜெர்மனி (Germany).		
	விமான நிலயம்.-வடஹாலந்து (Holland).	......	சேதமாயிற்று.
	ஜெர்மனியின் வெகுதூரம் சுடக்கூடிய பீரங்கிகள்.—காப் க்ரினே (Cap Gris Nez).	......	......

தேதி. பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
19—10—40. (சனிக்கிழமை)—தொடர்ச்சி.		
கடல் விமான நிலயம், ஒரு சாமான் கப்பல்–நார்வே (Norway)யில் ட்ராம்ஸோ (Tromso).	1 விமானம்.	......
கப்பல்கள்.—பென்காஸி (Benghazi) துறைமுகம்.	......	தீப்பிடித்தன.
சைன்யங்கள் வசிக்குமிடங்கள்.–பார்டியா (Bardia)வுக்கு மேற்கே.	......	......
விமானஞ்சுடும் பீரங்கிகள்.—ஸோலத் (Sollum) துக்கருகேயிருக்கும் ஹாலியா (Haleaya).	......	......
20—10—40. (ஞாயிற்றுக்கிழமை).		
புலிட்ஸர்ஸ்ட்ராஸ் (Pulitzerstrasse). ரயில் வண்டிகள், கூட்ஸ் வண்டிகள் நிறுத்திவைக்குமிடங்கள், மற்றும் அநேக ராணுவ முக்கியமான இடங்கள்.—பெர்லின் (Berlin).	......	படுசேதமாயிற்று. பல இடங்களில் தீப்பிடித்தது. தொழிற்சாலைகள் எல்லாம் வேலை செய்ய முடியவில்லை.
ஹிட்லரின் படையெடுக்க உபயோகப்படும் துறைமுகங்கள்.—பிரஞ்சு (French), பெல்ஜியன் (Belgian), டச்சு (Dutch)க் கடற்கரைகள்.		படு சேதமாயிற்று.
தொழிற் சாலைகள்.—ரூர் (Ruhr) ...	......	......
க்ருப்ஸ் (Krupps) தொழிற் சாலை.—எஸ்ஸன் (Essen).	......	வெடிச்சத்தங்கள் கிளம்பின.
கடற்படைக்கப்பல்கள் நிற்குமிடம்.—ஹாம்பர்க் (Hamburg), வில்ஹெல்ம்ஷாவன் (Wilhelmshaven).	......	ஒரு பெரிய யுத்தக் கப்பல் மேல் வெடி குண்டு விழுந்தது.
ஆலைகள்.—மிலான் (Milan) ...		
பியட் (Fiat) தொழிற் சாலைகள்.—டூரின் (Turin).	......	சேதமாயிற்று.
உலை.—அயோஸ்டா (Aosta) ...	......	......

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் விமான நஷ்டம்.	விரோதியின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
20—10—40.	(ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.		
	ரயில்வே கட்டடங்கள்.—டிரிடாவா (Dire-dawa).	......	தீப்பிடித்தன; 3 விமானங்கள் நாசமாயின.
	கட்டடங்கள்.—கூரா (Gura) ...	......	......
	அரசாங்க காரியாலயங்கள்.—ரோட்ஸ் (Rhodes) தீவுகள்.	......	பல இடங்களில் குண்டுகள் வீழ்ந்தன.
	டோடிகானீஸி (Dodecanese) யுள்ள மோரிட்ஸா (Moritza).	......	......
	எகிப்தின் பிரதானபட்டணம்.—கைரோ (Cairo) (இரண்டு தரம்).		சேதம் அதிகமில்லை; 6 பேருக்குக் காயம். ஒருவன் இறந்தான்.
	கடற்படை நிலயம்.—டொப்ருக் (Tobruk).	......	......
	விமான நிலயங்கள்.—அஸ்மாரா (Asmara), டிரிடாவா (Diredawa).	......	தரையிலிருந்த பல விமானங்கள் நாசமாயின.
	எரிடிரியா (Eritrea) வி லுள்ள அகோர்தத் (Agordat), அபிஸீனியா (Abyssinia) வி லுள்ள கூரா காம்ப் (Gura Camp).	......	......

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷாரின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
15—10—40.	(செவ்வாய்க்கிழமை).		
	காலையில்.—கெண்ட் (Kent) கடற்கரை. தேம்ஸ் (Thames)நதி முகத்துவாரம் ஹோம் கவுண்டீஸி (Home Counties)ல் பல இடங்கள்.	......	சேதமில்லை. விரட்டியடிக்கப்பட்டன.
	பிற்பகலில்.—லண்டன் (London), தென் கிழக்கு இங்கிலாந்து (England).	......	காயம்பட்டவர்கள் சொற்பந்தான்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷாரின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
15—10—40.	(செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.		
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம், ஹோம் கவுண்டீஸ் (Home Counties), ஒரு மிட்லண்ட்ஸ் (Midlands) பட்டணம். தென்மேற்கு இங்கிலாந்தில் ஒரு பட்டணம்.	...... 18 விமானங்கள்	தீப்பிடித்தது; ஆனால் சீக்கிரம் அணைத்து விட்டார்கள். சொற்ப சேதந் தான். சிலர் மாண்டனர். 15 விமானங்கள் 9 விமானிகள் பத்திரம்.
	கடற்படை.—அலெக்ஸாண்டிரியா (Alexandria).	......	சேதமேயில்லை.
16—10—40.	(புதன்கிழமை).		
	பகலில்.—ஸ்காத்லாந்தி (Scotland)ல் ஒரு கடற்கரைப்பட்டணம்; வெஸ்ட் கவுண்டி (West County)யில் ஒரு இடம், பிரிடிஷ் கடற்கரையைச்சுற்றிப் பல இடங்கள்.	......	சேதமில்லை; ஒருவருக்கும் காயமுமில்லை.
	இரவில்.—லண்டன் (London), பிஷப்ஸ் ஸ்டார்ட்போர்ட் Bisop's Stortford), வடக்கு வேல்ஸ் (Wales), ஒரு தென் கிழக்குக் கடற்கரைப்பட்டணம், மிட்லண்ட்ஸி (Midlands)ல் ஒரு பட்டணம்	..... 4 விமானங்கள்.	பல இடங்களில் தீப்பிடித்தது. ஆனால் சீக்கிரம் அணைக்கப்பட்டு விட்டது. சில வீடுகள் இடிந்தன. சிலருக்குக் காயம்; சிலர் இறந்தனர். நஷ்டமில்லை.
	அலெக்ஸாண்டிரியா (Alexandria).		துரத்தியடிக்கப்பட்டன. சேதமில்லை.
17—10—40.	(வியாழக்கிழமை).		
	பகலில்.—தென்மேற்கு இங்கிலாந்து (England); தென்கிழக்குக் கடற்கரையில் ஜனங்கள் வசிக்கும் சில இடங்கள்.	......	மிகவும் சொற்ப சேதம்,

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷாரின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
17—10—40. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.			
	இரவில்.—லண்டன் (London), மிட்லண்ட்ஸி (Midlands)ல் ஒரு பட்டணம்; மர்ஸிஸயிட் (Merseyside).	...... 4 விமானங்கள்.	சொற்ப சேதந்தான் 4 விமானங்கள்.
18—10—40. (வெள்ளிக்கிழமை)			
	பகலில்.—(விமானப்படையெடுப்பும் மும்முரமில்லை) தென்கிழக்கு ஸ்காத்லாந்து (Scotland), தென்கிழக்கு இங்கிலாந்தி (England)-ல் சில இடங்கள்; ஹாம்ஷையரில் (Hampshire) ஒரு பட்டணம்.	......	சொற்ப சேதம் சிலருக்குக்காயம்.
	இரவில்.—லண்டன் (London) மிட்லண்ட்ஸ் (Midlands), மர்ஸிஸயிட் (Merseyside), தென்கிழக்கு இங்கிலாந்தி (England)-ல் சில இடங்கள்.	......	சிலர் மாண்டனர்.
	இரண்டு நடுநிலைமை நாடுகள்.—பாஹ்ரீன் (Bahrein), ஸாடி அரேபியா (Saudi Arabia).	......	நடு நிலைமை. பாதிக்கப்பட்டது.
19—10—40 (சனிக்கிழமை).			
	பகலில்.—அங்குமிங்கும் சொற்பப் படையெடுப்பு இருந்தது. கெண்ட் (Kent), தென்மேற்கு இங்கிலாந்து (England), மிட்லண்ட்ஸி(Midlands)ல் ஒரு பட்டணம், தென்கிழக்குக் கடற்கரையில் இரண்டு பட்டணங்கள்.	......	சொற்பசேதம்; ஒருவருக்கும் காயமில்லை.
	இரவில்.—லண்டன் (London), மிட்லண்ட்ஸ் (Midlands), மர்ஸிஸயிட் (Merseyside), இங்கிலாந்தி (England)ல் சில பட்டணங்கள், வேல்ஸ் (Wales), லிவர்பூல் (Liverpool).	...... 2 விமானங்கள்.	சில இடங்களில் தீப் பிடித்தது. சில வீடுகள் இடிந்தன. சிலருக்குக்காயம். நஷ்டமில்லை.
20—10—40 (ஞாயிற்றுக்கிழமை).			
	பகலில்.—லண்டன் (London), கெண்ட் (Kent) கடற்கரை, தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்; எஸ்ஸெக்ஸ் (Essex).	......	சேதம் அதிகமில்லை. சிலருக்குக்காயம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் விமான நஷ்டம்.	பிரிடிஷாரின் விமான நஷ்டமும்; குண்டுகளால் விளையும் சேதமும்.
20—10—40.	(ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.		
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம்		சில கட்டங்கள் சேதமாயின.
	மிட்லண்ட்ஸ் (Midlands), தென்கிழக்கு இங்கிலாந்தி(England)ல் சில இடங்கள்.	7 விமானங்கள்.	3 விமானங்கள். விமானிகள் மூவரும் உயிர் தப்பினர்.
21—10—40.	(திங்கட்கிழமை.)		
	பகலில்.—லண்டன் (London) மிட்லண்ட்ஸ் (Midlands), லாங்காஷயரி (Lanca Shire)ல் ஒரு தொழிற்சாலை. இங்கிலீஷ் கால்வாயி (English Channel)ன் பக்கமுள்ள கடற் கரையில் பல இடங்கள்.		சில கட்டடங்கள் இடிந்தன; சேதம் சொற்பம் இருந்தது, சிலருக்குத்தான் காயம்.
	இரவில்.—லண்டன் (London), மர்ஸிஸயிட் (Merseyside), மிட்லண்ட்ஸ் (Midlands), தென் கிழக்கு இங்கிலாந்தி (England)ல் சில பட்டணங்கள், தென் வேல்ஸ் (Wales).	5விமானங்கள்.	தீப்பிடித்தது, ஆனால் சீக்கிரம் அணைத்துவிட்டார்கள். சிலருக்குக் காயம். நஷ்டமில்லை.
	அலெக்ஸாண்டிரியா (Alexandria).		விரட்டியடிக்கப்பட்டன.

அனுபந்தம் I.

யுத்தக் குறிப்புகள்.

உண்மையான குடி அரசு.

சென்ற சில வருஷங்களாக பிரெஞ்சு தேச கவர்ன்மெண்டாரவர்கள் பலதடவைகளில் அவர்களுடைய மந்திரிகளை மாற்றிவந்திருக்கிறார்கள். அவ்விதம் மாற்றும் ஒவ்வொரு சமயமும், மிகவும் கோரமானவும் பயங்கரமானவுமான நடவடிக்கைகளின் பயனாகத்தான் மாறுபாடுகள் ஏற்பட்டுவந்தன. பிரெஞ்சு தேச வள்ளல் இப்படிக்கிருக்கையில், இந்த விஷயங்களை கோயபெல்ஸ், ரிப்பன்ட்ராப் அல்லது லே துரை இவர்கள் அறிந்தால், சும்மாவா விட்டுவிடுவார்கள்? ஏக "ரகளை" செய்துவிடமாட்டார்களா? நிற்க, சற்று ஆங்கிலேய குடி அரசின் தோரணையையும், சாந்தமான முறையையும் கவனிப்போம். ஆங்கிலேய மந்திரி சபையில் மந்திரிகளான சேம்பர்லின், கால்டிகாட் பிரபு, ஸர் ஜான் ஆண்டர்ஸன் இவர்களை நீக்கி, இவர்கள் ஸ்தானத்தில் புதிதாக இதரர்களை நியமனம் செய்ய நிச்சயித்தபொழுது, பிரதம மந்திரி சர்ச்சில் துப்பாக்கிக் கையுடன் கொலைகாரர்களைக் கூட்டிக்கொண்டு மேற்சொன்ன மந்திரிகளைக் கொலை செய்துவிடவா சென்றார்? இல்லை, சேம்பர்லின் துரை அவர்கள், மரியாதையாக தானே வேலையிலிருந்து விலகிக்கொண்டார். கால்டிகாட் அவர்கள், பிரபுக்கள் சபைக்கு (House of Lords) நியமிக்கப்பட்டுவிட்டார்கள்; ஸர் ஜான் ஆண்டர்ஸன் மற்றொரு வேலையில் அமர்த்தப்பட்டார்.

Mr. மாரிஸன், ஸர் ஜான்ரீத் இவர்கள் போன்ற புலிகள், நிபுணர்கள், சாமர்த்தியசாலிகள், மிகவும் பொறுப்புவாய்ந்த, மேற்பட்ட நிர்வாக ஸ்தானங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பேற்கொத்த மாறுதல்களில் ஏதேனும் கலவரை உண்டோ? இல்லை. மாறுதல்கள் தேவை என்று பொது மக்கள் கவர்ன்மெண்டாருக்கு அறியப்படுத்தினதும், அவ்வறிவிப்பின் நியாயத்தை அங்கீகரித்து, ராஜாங்க நிர்வாகத்திற்கு யாதொரு இடையூறு அன்னியிலும், 'காதும் காதும் வைத்தது போல்' என்று நாம் சொல்லுவது போல், சரசமாக இம்மகத்தான விஷயங்கள் இங்கிலாந்தில் நடைபெற்று வருகின்றன. இதல்லவோ உண்மையான குடி அரசு!

ஜெர்மானியர்களின் 'மின்னல் கோடி' சண்டையின் கதியோ!

சென்ற இரண்டு மாதங்களில் லண்டன்மாநகரை நரகமாகவே செய்துவிடுவதாகத்தான் ஜெர்மானிய முயற்சி. இந்த முயற்சியில் ஜெர்மானியர்கள் இரண்டு கொள்கைகளை உபயோகித்துப் பார்த்தார்கள். இங்கிலாந்து தேசத்தில் உள்ள துறைமுகங்களையும், வெடி குண்டு, துப்பாக்கி முதலியவைகளை உற்பத்தி செய்யும் சாலைகளையும், போக்கு வரத்து சாதனங்களையும் நாசம் செய்து

இங்கிலாந்து தேசத்திலேயே பெரிய களேபரம் செய்துவிட்டால், பிரிடிஷ் நிர்வாகிகள் கைவிட்டுவிடுவார்கள் என்பதே முதல் கொள்கை. இதில் ஜெர்மானியர்கள் 'பாச்சா' பலிக்கவில்லை.

மற்றென்றே! லண்டன் பேரிலும், லண்டனிலுள்ள ஜனங்கள் பேரிலும் வெடிகுண்டுகள் போட்டு, நாசம்செய்து விட்டால், ஜனங்கள் திகிலடைந்து, மனங்கலங்கி ஊரைவிட்டு இங்கிலாந்தில் உள்ள இதர நகரங்களுக்கு வெளியேறி விடுவார்கள். உடனே இங்கிலாந்தின்பேரில் படையெடுக்கலாம். அப்பொழுது, இங்கிலாந்து தேசத்திலுள்ளவர்களே, துப்பாக்கியைக் கீழேபோட்டு விடுவார்கள் (Budapest-ல் அறிக்கைகளை கவனிக்கவும்) என்பது மற்றொரு கொள்கை. எல்லாம் மனக்கோட்டையாகப் போய்விட்டது.

இரண்டு முயற்சிகளும்தான் செய்தார்கள்—முடிவு என்ன?

(*a*) சேதம் சற்று ஜாஸ்தியாக இருந்தபோதிலும், போக்குவரவு ஸாதனங்கள் அத்யாச்சரியமான சௌகர்யத்துடன் அனுபவிக்கப்பட்டு வருகின்றன.

(*b*) முக்யமான யுத்த ஸாதனங்களில் (அதாவது இருக்கும் ஸ்தாபனங்களில் துறைமுகங்கள், ஆகாயக் கப்பல்கள் வைக்கும் இடங்கள் முதலியன) சேதம் மிகவும் குறைச்சல், அதாவது ஒன்றுமே இல்லை என்று தினந்தோறும் அறிவிக்கப்படுகிறது.

(*c*) எல்லா ஜனங்களுமே சண்டையில் முதல் அணியில் உள்ளவர்கள் போல் தயார் செய்துகொண்டு விட்டார்கள். ஜனங்கள் ஸாவதானமும், சௌக்யமும் தினேதினே ஜாஸ்தியாகிக்கொண்டு வருகிறது. இதுவும் ஆகாய விமான வெடிகுண்டுகளால் வீடுகளை இழந்தவர்களுக்கு முக்யமாக கவனிக்கப்பட்டு வருகிறது. ஜயத்தில் நம்பிக்கையும், மனந்தளராத தைர்யமும், உத்ஸாஹமும் விருத்தியாகிக்கொண்டு வருகிறது.

ஆகையால் "மின்னல்கோடி" சண்டைபோட்டும் மனந்தளராமல் அச்சண்டையை எதிர்த்து அச்சண்டையின் ரந்திரத்தை அறிந்துவிட்டபடியால், அச்சண்டையே தோல்வியடைந்துவிட்டதென்று சொல்லவேண்டும். ஜயிக்க முடியாத ஜெர்மானியர் ஆகாய விமானப்படையாமே! அது என்ன? கவனிப்போம்.

கோயரிங் பிரமாதமாகச் சொல்லுகிறரே, அவர் ஆகாய விமானப்படையைப் பற்றி, அவைகளின் நேர்மையைக் கவனியுங்கள்.

(*a*) 3–10–40 ராய்ட்டர் அறிக்கை:—இங்கிலாந்தின் பேரில் பறந்துவந்த ஜெர்மன் விமானங்களில் சுடுபட்டு விழுக்கடிக்கப்பட்டவைகளை பரீக்ஷித்ததில், அவைகள் பழைய மாதிரி விமானங்களாக இருக்கின்றன.

(*b*) 2—10—40 ராய்ட்டர் அறிக்கை:—ஜெர்மானியர்களுக்குச் செல்லும் ஸாமான்களுக்கு முற்றுகை போடும் இலாகா மந்திரி, தன் இலாகா நிபுணர்கள் மூலம் தெரிவிக்கிறதாவது:—"ஜெர்மானியர்கள் தாங்கள் தோற்கடிக்கப்பட்ட

தேசங்களிலிருந்து திருடின பெட்ரோல்கள் முழுவதையும் உபயோகப்படுத்தி விட்டார்கள். இனி பெட்ரோல் அவர்கள் வசம் இல்லை."

(c) மேலும், ஜெர்மனியில் ஆகாய விமான ஓட்டிகள் குறைந்துபோய், 5,000 இதாலியர்கள் அமெரிக்காவிலிருந்து ஜெர்மனிக்குப் போயிருப்பதாக 3-10-40-ல் வாஷிங்டனில் அறிவிக்கப்படுகிறது! இதெல்லாம் ஒரு நற்செய்தியோ?

நாம் அடியிற்கண்டதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

(i) ஜெர்மனியில் புதுமாதிரி ஆகாய விமானம் செய்து வருகிறார்களாம். இங்கிலாந்தின்பேரில் படை எடுக்காமலிருந்தால், அவைகளை ஒருக்கால் மத்தியதரைக்கடல் மத்திய தேசங்களில் உபயோகிக்கலாம்.

(ii) ஜெர்மானியர்கள் போலந்தையும், ஸ்காந்தினேவியாவையும் அழிப்பதற்கு முன்னால், ஜெர்மானியர்கள் ஏராளமாக எண்ணெய் சேர்த்து வைத்திருக்கவேண்டும். ஆனால் போலந்து, ஸ்காந்தினேவியா சண்டைகளிலும், இங்கிலாந்தின்பேரில் ஆகாயத்தில் சண்டை போட்டதிலும், எண்ணெய் உபயோகப்பட்டுப்போயிருந்தும், ருமேனியாவிலிருந்து பெட்ரோலியம் ஏராளமாக, ஜெர்மனிக்கு வந்து கொண்டே இருக்கிறது.

(iii) இதாலியர்கள் அவர்களுடைய ஆகாய விமானங்களை ஜெர்மனிக்குக் கொடுத்து உதவி செய்வதாக அமெரிக்கா தேசத்தில் சொல்லுகிறார்கள். நாமும், ஜெர்மானியர்களுமே, இதாலிய ஆகாய விமானங்களுடைய பலத்தைப்பற்றி நன்றாக அறிந்தவர்கள். அவைகள் கேவலம் பொம்மைகள்—சக்தி அற்றவைகள். ஆகையால் அவைகளின் ஒத்தாசையையா ஹிட்லர் தேடுவார்?

இருந்தபோதிலும்—பல இடங்களில் ஜயித்த பெரிய ஆகாய விமானப்படை இங்கிலாந்தின் பெருமைவாய்ந்ததும் ஜயிக்க முடியாததுமான ஆகாய விமானப் படையை எதிர்த்ததே.

புதிய ஒப்பந்தம்—ஜப்பானுடன்! அதேன்ன.

ராஜதந்திரமோ சதுரங்க விளையாட்டுப்போல், ஒவ்வொரு நகத்துதலின் நோக்கமும், பின்னால்தான் விளங்கும், உடன் காலத்தில் விளங்காது. அப்புறம்தான், ஏமாந்துபோன எதிர்க்கக்ஷிக்காரனோ, அல்லது பக்கத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறவர்களோ?, 'ஆஹா! இப்பல்லவா, விளங்கிற்று' என்று சொல்லுகிற வழக்கம்.

முதல் ஆட்டம்.—ம்யூனிக் ஒப்பந்தத்திற்குப் பிறகு, ஹிட்லர் ஜப்பான் மாதிரிதான் தன்னுடைய ராஜதந்திரம் என்று தீர்மானித்து ஜப்பானியரின் எதிரியினுடன் ஸ்நேகம் செய்துவிடவேண்டும் என்று உத்தேசம் செய்தது. இது புத்திசாலித்தனம்தான். ஆனால் அதிலிருந்து ஒரு லாபமும் இல்லை. இங்கிலாந்து

அதனால் பயப்படவும் இல்லை. ஒன்றுதான் மிஞ்சினது. பால்டிக் தேசங்கள் ஒன்று சேர்ந்தனவே அதுதான்.

இரண்டாவது.—ரஷியா தென்கிழக்கு ஐரோப்பாவில் வேலைகள் செய்தது ஹிட்லருக்கு சிறிது ஸங்கடமாயிருந்தது. ஆகையால் 27—9—40ல் ஜப்பானுடன் ஜெர்மனி ஸ்நேகம் செய்தது. ரஷியாவைச் சற்று பயமுறுத்தவோ அல்லது ஸ்பெயின் தேசத்துடனும், இதாலியுடனும் நேசமாயிருக்கவோ சரியான பங்காளி என்று நினைத்ததுபோலும்.

சதுரங்க பாஷையிலேயே எழுதுவோம்—ஹிட்லர், "ரஷியா," "அமெரிக்கா" என்று இரண்டு காலாட்படைகளை மறைத்து, இங்கிலாந்து "ராஜாவை" தோற்கடிக்க நகத்துவதுபோல், ஜப்பான் "சஹட்டை" நகத்தினர். ரஷியா தேசத்து ஸ்டாலின் ஜெர்மனியுடனுவது, ஜப்பானுடனுவது பஹிரங்கமாகப் போர் புரியத் தயாராக இல்லை. ஜெர்மானியர்கள், தென்கிழக்கு ஐரோப்பாவில் சற்று "விளையாட" ஆரம்பிப்பதை, ரஷியர்கள் எதிர்த்தால், ஜப்பான் ரஷியாவைத் தாக்க ஆரம்பிக்கும். நிற்க, அமெரிக்காவும் இங்கிலீஷ்காரர்களுக்கு, அட்லாண்டிக் ஸமுத்திரத்திலும், ஐரோப்பாவிலும் ஒத்தாசை செய்வதற்குப் பதிலாக, பஸிபிக் மஹாஸமுத்திரத்தில் ஜப்பானியர்களை எதிர்க்க முயற்சி செய்யவேண்டியிருக்கும்.

இவை எல்லாம் ஹிட்லரின் மனோபாவம் நேர்மையாகத்தான் இருக்கிறது. ஆனல் மேற்கண்ட மனோபாவமும் இரண்டு முக்கியமான விஷயங்களை கவனியாமல் ஏற்பட்டிருக்கிறது.

ஒன்று :—ஜப்பான் தேசம், ஜெர்மானியர்கள், இதாலியர்கள், இவர்களுடைய ஒத்தாசைக்குப் பிரதி பிரயோஜனமாக, இங்கிலாந்தையும், அமெரிக்காவையும், ரஷியாவையும் தாக்கத்தயாராக இருப்பதுபோலவும்.

இரண்டு :—ஹிட்லர் இங்கிலாந்தை தோற்கடிக்கப் போவது நிச்சயம் போலவும்.

இவை இரண்டும் "அத்தைக்கு மீசை முளைத்தால்" என்பது போலத்தான்.

இனி வரக்கூடிய எதிர்ப்புகள்.

"யுத்தங்களை, யுத்தகளத்திலிருந்து கௌரவமாகப் பின் வாங்குவதால் ஜயிக்கமுடியாது" என்று சர்ச்சில்துரை முன்பு ஒரு தரம் சொன்னர். பிரிடிஷ் பிரதம மந்திரி எப்பொழுதும் வெறும் காரமான பேச்சுகளைப் பேசுவதில்லை. சற்று காலமாக நடந்துவருவவை கவனியுங்கள். நூற்றுக்கணக்கான ஆங்கிலேயே ஆகாயவிமானங்கள் ஜெர்மனி தேசத்திற்குள்ளேயே பறந்துபோய் குண்டுகள் போட்டிருக்கின்றன. ஜெர்மானியர்களுக்குச் சொந்தமான துறைமுகங்களின் பேரிலும் வெடிகுண்டு மயமாகப் போடப்பட்டு அவைகளும் துறைமுகம் என்ற யோக்யதையே இழந்துவிட்டன. ஜெர்மனி இங்கிலாந்தின்பேரில் படை எடுப்பது என்பதுபோக, இங்கிலாந்தின் யுத்த சம்பந்தமான மூன்று இலாகாத் தலைவர்களும் ஜெர்மனிபேரில் படை எடுப்பதைப்பற்றி கவனித்துக்கொண்டிருக்கிறுர்கள்.

இங்கிலாந்தின் மூன்று யுத்த இலாகாத்தலைவர்களும் யுத்தத்தைப்பற்றி யோசித்துக் கொண்டிருப்பதெல்லாம் எப்படி ஜெர்மனியை உள்ளேபோய் தாக்குவது என்பது பற்றியே. எதிரியைத் தடுத்துக்கொண்டிருப்பது மட்டும் பிரிடனுடைய நோக்க மல்ல; ஆனல் முடிவான ஜயமே. ஏனென்ருல் ஹிட்லரினுடைய ஆதிக்கத்தை உலகினின்றும் ஒழிப்பதற்கு முடிவான ஜயம் தவிர வேறென்றும் இல்லை.

* * * *

ஆகாய விமானச் சண்டையிலிருந்து வெளியாகும் விஷயங்கள்.

கீழ் காணும்விஷயங்கள் எவ்வளவு தெளிவாகக் காட்டுகின்றன :—

ஸெப்டம்பர் 24-வ இங்கிலாந்தில் 10 ஜெர்மன் விமானங்கள் வீழ்த்தப் பட்டன. இதில் 8 ஆகாய விமான எதிர்ப்புப் பீரங்கிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன. பகலில் 6-ம், இரவில் 2-ம். சிறிய வேட்டைதான்.

மாக்டிபர்க் என்னும் இடத்தில் பிரிடிஷ் விமானங்கள் படை எடுத்த போது ஒரு விமான ஓட்டி எண்ணெய் சுத்தப்படுத்தும் இடத்தில் 35 நெருப்புகள் கணக் கெண்ணினன். மிகவும் சூடான இடமே.

போலிஷ் விமானப்படை பிரிடிஷ் விமானப் படையோடு சேர்ந்து நூற்றுக்கு மேற்பட்ட ஜெர்மன் விமானங்களை ஸெப்டம்பர் மாதத்தில் வீழ்த்தின. பழிக்குப்பழி மிகவும் ருசியானதே.

வெளியேற்றப்படுவதில் பெர்லினில் நாஸிக்கக்ஷிக்காரர்களுக்கே அதிகாரி களால் முதலிடம் அளிக்கப்படுகிறது. இங்கு இந்தியாவில் பகுத்தறிவோடு செய்யப்படும் சட்டங்களுக்கே நாம் குறைகூறுகிருேம்,

சமீபத்தில் சாப்பாட்டு இலாகா மந்திரி லண்டனில் 58 'ஆபத்தில் சாப்பாடு போடும்' இடங்கள் திறக்கப்பட்டிருப்பதாகவும் இன்னும் 200 இடங்களுக்கு ஏற்பாடு செய்திருப்பதாகவும் அறிவித்திருக்கிருர். புதிதாகத் தரப்பட்டிருக்கும் இந்த அனுமதியைப்பற்றி கிளப்புக்காரர்கள் சந்தோஷப்படவேண்டும்.

பிரன்னரில் படைக்கலத்தோடுகூடிய ரயில்.

கடந்த அக்டோபர் மாதத்தில் சர்வாதிகாரிகள் தங்களுடைய இரண்டாவது போர்க்கிரியைகள் முன்னதைக்காட்டிலும் விரிவானதாகவும், அபாயங்கள் உள்ள தாகவும் இருக்குமென்று நினைத்திருப்பார்களென்று எண்ணுகிறீர்களா?

ஹிட்லர் இங்கிலாந்தின்மேல் படை எடுப்பதில் தவறியதும், முஸோலினி, மத்தியதரைக்கடலில் பிரிடனின் கடல்பலத்தைக் குறைப்பதில் ஏற்பட்ட ஏமாற்ற மும் அவர்களுடைய காபியின் மணத்தைக்கூட மாற்றியிருக்கும்

ஆனலும் ஹிட்லரின் "கைவிட்ட பையன்" முஸோலினி தன்னுடைய ஆபிரிக்க ஸாம்ராஜ்யத்தையும், "பாஸிஸ்ட்" கொள்கைகளையும் ஆபத்திற்குள்ளடக்கிக் கொண்டு எகிப்தின்பேரில் பெரியபோர் தொடுத்திருக்கிருர். இன்னமும் நாம் இப்போது நடந்துவரும் சமரசப் பேச்சுக்களைப்பற்றியும் அதிகம் கேட்கலாம்.

அதைப்பற்றிக் கேட்காவிட்டாலும் அதைவிட வேறு ஏதாவது புது பயமுறுத்தலைக்கேட்கலாம். நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை சொல்வதைப்போல் "ஜெர்மனி, இதாலி சண்டையைப்பற்றிப் பேசுகின்றன. ஆனால் சமாதானத்தையே விரும்புகின்றன" என்பதில் தப்பிதமேயில்லை. அப்படியே அவைகள் விரும்பலாம். ஆனால் சில நிபந்தனைகள் முதலில் இருக்கின்றன. பின் சில பழங்கணக்குகளும் கவனிக்கப்படவேண்டும்.

ஹேர்ரிங் பாண்டுக்கு அப்பக்கம் இருக்கும் நம் சினேகிதர்.

போன வாரத்தின் தலைமைப் பிரஸங்கத்தை அனுஸரித்து பிறகு கீழ்க் கண்டவைகள் உற்சாகத்தை உண்டாக்கும்.

ஜப்பானுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதில், ஐரோப்பாவில் உள்ள சண்டையில் சேர்ந்துகொள்ளக்கூடாது என அமெரிக்காவில் பலர்களின் மனப்பான்மை ஜாஸ்தியாகும் என்ற எண்ணம் வெகு தூரத்திற்கு அப்பால் போய் விட்டதுபோல் தோன்றுகிறது. இதைக் கேளுங்கள்:—

ஐந்து அமெரிக்கா பத்திரிகைக்காரர்கள் (Mr. நிக்கர் பாக்கரும், ஷீகனும் உள்பட) ஒதுக்க புத்தி உள்ளவர்களுக்கு பிரிடிஷாருடைய ஜயத்தில் பூர்ண நம்பிக்கை உள்ளதாகச் சொன்னார்கள். ஆகாயத்தில் பிரிடிஷாருடைய ஆதிக்கமும், எதிர்பார்த்ததைக் காட்டிலும் சீக்கிரமாகவே மேற்பட்டிருக்கிறது.

"நம்முடைய ஆகாயப்படை கட்டுவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டாலும் நான் பிரிடனுக்கு உதவி செய்யவேன்." (வெண்டல் வில்கி, கிளீவ்லண்டில் சொன்னார்).

வாஷிங்டனில் உள்ள டைம்ஸ் பத்திரிகையின் நிருபர் சொல்லுகிறார். பிரிடனின் சாமான் தேர்ந்தெடுத்து வாங்க வந்திருப்பவர்களின் கோரிக்கைக்கு அமெரிக்காவில் அமோகமாக இருப்பதிலிருந்து இன்னும் ஜாஸ்தியாகவும் கொடுக்கிறார்கள்.

யுத்த தளவாட சேகரிப்பின் முயற்சியில் அமெரிக்காவில் வேலையில்லாதவர்களின் தொகை முக்கால்வாசி குறைந்து விட்டது.

அனுபந்தம் II.

பர்மா பாதை.

இந்த பர்மா பாதை யுன்னன் மாகாணத்தில் குன்மிங்கு என்ற ஊரிலிருந்து பர்மா ரயில் தலை ஊரான லாஷி வரையில் 726-மைல் நீளமுள்ளது. குன்மிங்கிலிருந்து சுங்கிங் வரை மற்றொரு 700-மைல் ரயில் பாதையோடுள்ளது. இது 1938-ம் வருஷத்தில் சரியாக ஒரு வருஷத்தில் போடப்பட்டு மறு வருஷ ஆரம்பத்தில் வியாபாரத்திற்காகத் திறக்கப்பட்டது. 200 இஞ்ஜினியர்களும் லக்ஷத்தி அறுபதினாயிரம் ஆட்களும் இது போட வேலை செய்தார்கள்,

சீன ரிங்கியில் ஆறு கோடி முதலில் செலவழிக்கப்பட்டதுடன், மேலும் 10 கோடி ரிங்கிகள் இதன் தயாரிப்பிலும், அபிவிருத்தியிலும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. வெட்டப்பட்டுக் குடைந்துள்ள பாறையின் மத்தியிலுள்ள சிறிய பாதையாய் அநேக நேர் மலைத்தொடர்புகளின் குறுக்கே போவதால் இது போடப்பட்டது ஒரு வருஷ காலம் நிற்க, இது சிற்ப சாஸ்திரிகளின் அரிய பெரிய காரியமாகும். இதில் 289 பாலங்களும் 1959 சின்ன மதகுகளும் அடங்கியிருக்கிறது. இவைகளின் அகலம் சராசரி 9-அடி யிருப்பினும், நடுவில் நடுவில் வண்டிகள் மாறிப் போகும்படி 16-அடி அகலமுள்ளது.

இந்தப் பாதை மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. குன்மிங்கி லிருந்து மேல யுன்னன் வியாபார மத்திய ஸ்தலமான ஷாக்வான் வரையுள்ள முதல் பாகம் 260-மைல் நீளமும் ஷாக்வானிலிருந்து சீன பர்மா எல்லைப்புறத்திலுள்ள சிறிய கிராமமான ஆன்டிங்கு வரை இரண்டாவது பாகம் 350-மைலும், லாஷிக்குத் தெற்கே சீன் எல்லையில் ஓடும் பர்மா செக்ஷன் 116-மைலோ, அல்லது சீன தேசத்திற்கு யுத்த தளவாடங்கள் கப்பலேற்றப்படும் ஐராவதி நதி தீரத்திலுள்ள பாமோ என்ற ஊரிலிருந்து வடக்கே பிரிந்து போகும் 110-மைலோ, மூன்ருவது பாகமாகும்.

லாஷியிலிருந்து குன்மிங்குக்குச் செல்ல ஒரு நல்ல மோட்டார் வண்டிக்கு நான்கு நாட்களும், மோட்டார் லாரிகளுக்கு ஆறு அல்லது ஏழு நாட்களும் பிடிக்கும். 1939-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் 1940-ம் வருஷம் மார்ச்சுடன் முடிய ஒரு வருஷத்தில் இரண்டு கோடி பவுன் பொருமதியுள்ள சரக்குகள் இந்த வழி சென்றிருக்கிறது. 300-டன் நிறையுள்ள யுத்த தளவாடங்கள் மோட்டார் லாரிகள் மூலம் இந்தப் பாதை மார்க்கமாய் ஓயாமல் சென்று கொண்டிருந்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தப் பாதையை மூடினது முதல் சீனர்கள் இதைச் செப்பனிட்டிருப்பதால், வியாபாரம் இப்போது அதிகரிக்கப்படலாம். ஜூலை முதல் அக்டோபர் வரை மழை காலத்தில், நிலச் சருக்கினல் வியாபாரம் மிகவும் குறைபடச் செய்கிறது. முதலில் இது அநேகமாய் நின்றுவிட்டது. ஆனல், இப்போது இந்த பாதை மார்க்கம் மழையில் கொஞ்சம் குறைவு பட்டாலும், விடாத போக்கு வரத்து இருந்துவரும். இந்தப் பாதை இப்போது செப்பனிடப்பட்டு, நல்ல ஸ்திதியிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்த வழி மூலம் சமீப காலத்தில் செல்லும் போர்தளவாடங்கள் பெரும் பாலும் ருஷியர்கள் அமெரிக்கர்களின் உற்பத்தியே. இருந்தாலும், இந்தப் பாதை முதலில் திறக்கப்பட்டபோது ஜெர்மானியர்களுக்கும் இதாலியர்களுக்கும் கூட சொந்தமான சாமான்கள் சென்றதாக ருசுவிருக்கிறது.

சீன தேசத்திற்குச் செல்லும் இதர பாதைகள் கொஞ்சம் கொஞ்சமாக மூடப்பட்டு வருவதால், இந்தபர்மா பாதை வெளி உலகத்திற்குப் பிராணுதாரமான தொக்கியாக ஆகிவிட்டது. ஜப்பானியர்கள் செய்திருக்கும் கடற்கரை முற்றுகை

யால் சீன தேசத்திற்கு மூன்றே வழிகள் திறந்திருக்கின்றன. இவை இண்டோ சைனாவிலிருந்து பிரெஞ்சுக்காரர் வழியும், மங்கோலியா மூலம் ருஷியர்கள் வழியும், இந்த பர்மா பாதையுமாகும். சென்ற சரத் காலத்தில் நாசிவ் பிடிபட்டதுமூலம் பிரெஞ்சுக்காரர் வழி தடைபட்டுவிட்டதுடன், சமீபத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் பூராவும் இந்த வழி மூடப்பட்டுவிட்டது. ருஷியர்கள் வழியோ மிகச்சுற்றாகவும், கெடுதலாகவு மிருப்பதால், அதின் மூலம் மிகவும் சொல்ப வியாபாரப் பொருள்களே கொண்டுபோக முடியும்.

ஜூலை மாதத்தில் பர்மா ரஸ்தாவை மூடினது ஜப்பானுடைய கட்டாயத்தின் மூலமாயினும் அது பலவீனமான ஒப்புவித்தல் அல்ல. அது அமெரிக்காவிற்குத் தெரியாமலும் செய்யப்படவுமில்லை. இந்தப் பாதை சம்பந்தமாய் அந்தக் காலத்தில் ஐக்கிய நாடுகள் சுருசுருப்பான ஒத்தாசை எதுவும் செய்யமுடியவில்லை. இதை மூடும் ஒப்பந்தம் ஒரு கராருக்குள்பட்டது. அதாவது ஜப்பான் சைனாவுடன் ஒரு சமாதானத்தைச் செய்துகொள்ள ஏற்பாடு செய்யவேண்டுமென்பது தான். ஆனால் இந்த விதம் செய்யாததுமன்னியில், மிஸ்டர் சர்ச்சிலின் வார்த்தைகள்படி, "சீன ஜாதியை அடக்கிக்கொள்ள ஜப்பானின் அவசியமான போராட்டம் இதில் கூடிவரும் கஷ்டங்களுடன் மேன்மேலும் போய்க் கொண்டிருந்தது." ஜப்பானியர்கள் மூன்று மாதங்களாகாத இந்த ஒப்பந்தத்தை கடுகடுப்பான விதமாகப் புறக்கணித்தது "ஆக்ஸிஸ்காரனின்" வழிக்கு ஒத்ததாகவேயிருக்கிறது.

புது "ஆக்ஸிஸ்" உடன்படிக்கைக்கு ஆங்கிலேயர் பதில் இந்த பர்மா பாதையை திறந்துவிட்டதுதான். இதுபோல, ஐக்கிய நாடுகளின் பதில் கலோனல் நாக்ஸ் துரை "அமெரிக்கா சண்டை செய்யும்" என்று பேசியதாகும்.

மிஸ்டர் சர்ச்சில் சொல்லும் விதம் இந்த உடன்படிக்கை ஜப்பானுக்கு மிகவும் பாதகமாகயிருப்பதால், இதில் ஏதாவது ரகஸிய உள்வாக்கியங்கள் இருக்கவில்லையா என்று ஆச்சரியப்படும்படியிருக்கிறது. இந்தப் பக்கத்திலிருந்து வேகமான கிளர்ச்சிகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இதன் மூலம் அமெரிக்காவை உள்ளுக்கு இழுக்கக்கூடும். ஏற்கனவே சீனாவுடன் ருஷியா சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த சீன விஷயத்தில், ருஷியாவுடையவும், ஆங்கிலேயர்களுடையவும் அக்கரைகள் ஒத்தவிதமாக ஓடும் ஒரு உதாரணமாகக் காணலாம்.

அனுபந்தம் III.

கதம்பம்.

1. பிரிடனுடைய கப்பல் வியாபாரத்தைத் தொலைக்க காந்த கடல் வெடிகளும் (Magnetic mines) மற்றப் பிரயத்தனங்களும் பயனற்றுப் போனது போலவே இப்பொழுது பிரிடிஷ் மக்களைப் பயமுறுத்தச் செய்யும் விமானப் போரும் வீணாய்ப்போகப் போகிறது. (மிஸ்டர் சர்ச்சில்—காமன்ஸ் ஸபையில்—அக்டோபர் 8)

2. ஜெர்மனியை முறியடித்த பிறகுதான் யுத்தம் நிறுத்தப்படுமே ஒழிய அதற்குமுன் இல்லை. (ஆகாய சேனாபதி ஸர் பிலிப் ஜெனபார்ட்—ஒலிபரப்பு—அக்டோபர் 3).

3. பிரிடிஷ் மக்களின் சான்ற (தைரிய) குணம் இப்பொழுதுதான் வெளியாகிறது. (நியூ யார்க் டைம்ஸ்—அக்டோபர் 6).

4. ஜப்பான் கதி ஒரு அரிசி முனையில் நிற்கிறது. (எட்ரியன்மூர்—ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையில்—அக்டோபர் 7).

5. ஸெகோஸ்லொவேகியா பிடிபட்டதிலிருந்து இந்த தேசம் ஜெர்மானிய ரக்ஷக நாடாய் (Protectorate) விட்டது. அங்கிருக்கும் ரகஸ்ய போலீஸ் தலைவரை சில கலாசாலைத் தலைவர்கள் அடைத்துப்போட்டிருக்கும் கலாசாலைகளைத் திறந்து ரக்ஷிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு போலீஸ் தலைவர், ஒளிக்காது பதில் சொன்னார். அவர் பெயர் 'பிராங்க்'. அவர் சொன்ன பதிலும் 'பிராங்காக' அதாவது உள்ளது உள்ளபடி இருந்தது.

அவர் பதில்:—'கனவான்களே, நாங்கள் (ஜெர்மானியர்கள்) தோற்றுவிட்டால் உங்கள் பள்ளிக்கூடங்களை பழய ராஜாங்கத்தார் திறந்துவிடுவார்கள். நாங்கள் ஜயித்தால் உங்களுக்குப் பிரதம கல்விக்குமேல் கொடுக்கமாட்டோம். அதாவது 10 வயதோடு உங்கள் படிப்பை நிறுத்திவிடுவோம். ஆகையால் உங்கள் உயர்தர கலாசாலைகளைத் திறக்கமாட்டோம்' என்று உள்ளது உள்ளபடி மனதில் இருந்ததைச் சொல்லிவிட்டார்.

6. 'நமக்கு (பிரான்ஸுக்கு) ஏற்பட்டிருக்கும் அவமானத்தையும், துக்கத்தையும், நாசத்தையும், வேறு வழி ஒன்றும் இல்லாவிட்டால், நிவர்த்தி செய்ய ஏற்பாடு செய்யத்தெரியும்' என்று அக்டோபர் 11-ல் மார்ஷல் பிடேன் செய்தி விடுத்திருக்கிறார். இதில் ஏதோ விசேஷமிருப்பதாகத் தோன்றுகிறது.

7. "இந்த யுத்தத்தில் தோற்காது நிலைத்துக்கொள்ளுவது நம்மு (பிரிடனு)டைய முதல் கடமையாகும். அவ்விதம் வெற்றியடைய நாம் திறமை உள்ளவர்களென்பது இப்பொழுது உலகமறிந்துவிட்டது. அது நமக்கும் திண்ணமாய்த் தெரியும். இது உலகத்துக்குப் பூராவாகத் தெரிந்தபிறகு வெற்றிக்குப்பின் செய்யவேண்டிய காரியங்களை யோசிக்கவேண்டும்". (மிஸ்டர் சர்ச்சில்—காமன்ஸ் ஸபையில்—அக்டோபர் 15).

8. நில பீரங்கிகளின் இடி முழக்கத்தை, இப்பொழுது நான் எவ்வளவு நிச்சயமாய்க் கேட்கிறேனே, அவைகளின் ஆதரவால் எவ்வளவு நிச்சயமாய் நிர்ப்பயமாய் இருக்கின்றேனே, அவ்வளவு நிச்சயமாக, இப்பொழுது ஜெர்மானியரைத் தடுக்காவிட்டால் நம்முடைய ஆயுள் நாட்களுக்குள்ளாகவே இம்மாதிரியான பீரங்கி வேட்டுகள் நியூ யார்க்கிலும் கேட்குமென்பது திண்ணம்; அதாவது நிச்சயமாய், ஜெர்மன்—விமானங்கள் நியூ யார்க்கைப் படையெடுக்கும். (லெப்டினன்ட் வில்லியம், டிவிட் விட்னி—லண்டனிலிருந்து ஒலிபரப்பு—அக்டோபர் 10. இவர் அமெரிக்கர்—இப்பொழுது பிரிடிஷ் ராணுவத்தில் சேர்ந்திருக்கிறார்.)

9. பிரிடன் யுத்தம் செய்யும்போது ஆஸ்திரேலியர் ஒருவரும் சும்மா யிருக்கமாட்டார்கள். (மிஸ்டர் மென்ஸிஸ்—ஆஸ்திரேலிய பிரதம மந்திரி—ஸிட்னியில்—அக்டோபர்மீ 15உயில் சொல்லியது).

10. இந்த யுத்தம் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் சண்டை. ஒரு பக்கம் மிருகபலம், மற்ருெரு பக்கம் இரக்கமும், அன்பும், அவைகளால் ஏற்படும் அசக்தமும். கொலம்பியா எந்தக் கக்ஷியென்று சொல்லவும் வேண்டுமா? (கொலம்பியா—கலாசாலைத் தலைவர்—அக்டோபர் 5).

11. கடும்போர் செய்துவரும் சமயத்தில் பிரிடனேடு பேரம் பேசுவது சரியல்ல. (மிஸ்டர் ராமஸ்வாமி நாயக்கர்—ஜஸ்டிஸ் கக்ஷித்தலைவர்—அக்டோபர் 10).

12. உயிர்தப்ப சண்டை செய்யும் இந்த சமயத்தில் பிரிடனை நிபந்தனைகள் கேட்பது ஒழுங்கல்ல, அழகல்ல, (குமாரராஜா M. A. முத்தய்யா செட்டியார்).

13. கானடா, ஆஸ்திரேலியா மக்களைக்காட்டிலும் அதிகமாக ஸ்வதந்திரம் இந்தியர்களுக்கு வேண்டுமென்று நான் கேட்கமாட்டேன். (ஸர் ஷண்முகம் செட்டியார்—அக்டோபர் 8).

14. ஐரோப்பாவின் கஷ்டங்கள் தீரப் பல நாள் பிடிக்கும். இந்த கஷ்டங்களுக்கிடையே நமது கீர்த்திச்செயல்கள் பிரகாசிக்கவேண்டும். இவ்வீரச்செயல்களிலிருந்து ஐரோப்பாவின் க்ஷேமம் வெளிப்படும், வழிகாட்டப்படும். வெற்றிக்கு மேல் வெற்றியாக ஜயம் பெறப்போகிருேம். தோல்வி என்ற இருளானது இப்பொழுதே ஹிட்லரை மறைக்கிறது. (மிஸ்டர் ஸி. ஆர். அட்லி—அக்டோபர் 8).

15. ஹிட்லரைவிட அதிகமாக இங்கிலீஷ் கால்வாய்க்குக் கோபம் வந்துவிட்டது. இங்கிலீஷ் மக்கள், இங்கிலீஷ் கால்வாயோடு ஒன்றுகூடி ஜெர்மன் படையெடுப்பைத் தடுத்துவிட்டார்கள். மின்னல் எதிர்ப்பென்று சொல்லிக்கொண்டதில் மின்னலை (வேகத்தை)க் காணேம்.

அனுபந்தம் IV.

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

1—10—40.

ஸெப்டம்பர் 30-ம் தேதியன்று ஜெர்மனிமேலும், அதன் கைவச நாடுகளின் மேலும் படையெடுத்து உடைந்துபோன பிரிடிஷ் விமானங்கள் 5 பாம்பர்களா (வெடிகுண்டு விமானங்களா)கும். இங்கிலாந்திலேயே ஜெர்மன் விமானங்களோடு போர் செய்து அழிந்தவை 22 பைடர் (சண்டை) விமானங்களாகும். ஆக அன்று பிரிடனுக்கு மொத்த நஷ்டம் 27 விமானங்கள். உண்மை இப்படியிருக்க, அன்று

68 பிரிடிஷ் விமானங்கள் சேதமென்று ஜெர்மனி ஒலிபரப்பி, இவைகளில் 4 விமானங்கள் ஜெர்மனியின் இரவு விமானப்படையால் தகர்க்கப்பட்டதாகவும், 6 விமானங்கள் நில பீரங்கிகளால் சுடப்பட்டதாகவும் சொல்லுகிறது. ஜெர்மனி சொல்லுகிறபடி 10 விமானங்கள் நஷ்டப்பட்ட விதம் தெரிகிறதேயொழிய பாக்கி 58 விமானங்கள் சேதமானவிதம் தெரியவில்லை. ஒருசமயம் டாக்டர் கோயபெல்ஸே (பிரசாரமந்திரியே) இவைகளை உடைத்திருக்கலாம்.

2—10—40.

மூவரசு ஒப்பந்தத்தைத் துருக்கி மிகவும் மதிப்பதாக ரஷ்யப் பத்திரிகைகளான ப்ராவ்டாவும், இஸ்வெஸ்ட்யாவும் பிரஸ்தாபிக்கின்றன. ஆனால், உலகத்தை ஜயித்து உலக ஆதிபத்தியத்தை அடைவதற்காக இந்த ஒப்பந்தமேற்பட்டிருப்பதாகவும், இப்பேராசையை அடக்கவேண்டியது ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் பொதுப்பட்ட காரியமென்றும், அதற்காக இந்த இரண்டு அரசுகளும் பிரிடனோடு சேரவேண்டியதென்றும் துருக்கியின் பொதுஜன அபிப்பிராயமென்று ஸெப்டம்பர் 29-ம் தேதி வெளிவந்த இக்டாம் பத்திரிகை அபிப்பிராயப்படுகிறது.

ஜெர்மன் ரியர் அட்மிரல் லூயட்ஸோ என்பவர் இன்று ரேடியோ பிரசங்கம் ஒன்று செய்தார். 'இங்கிலாந்துக்கு அக்கரையிலிருக்கும் ஜெர்மனி பிடித்துக்கொண்டிருக்கும் கடற்கரை' என்பது அவர் பேச எடுத்துக்கொண்ட விஷயம். இதைப்பற்றிப்பேச கால்மணி நேரம் போதாதென்று பேச்சை மாற்றிக்கொண்டார். எடுத்துக்கொண்ட விஷயத்தைப்பற்றிப் பேசியிருந்தால் பிரிடன் தகர்த்துவிட்ட துறைமுகங்களைப்பற்றியும், பண்டகசாலைகளைப்பற்றியும், பிரிடன் கொளுத்திவிட்ட ஜெர்மன் கப்பல்களைப்பற்றியும் பேச நேரிட்டிருக்கும். இதை எல்லாம் மறைப்பதற்காக பிரான்ஸில் உள்ள சார்டிரே கோவிலையும் ஜெர்மனியில் உள்ள நியூரம்பர்க் கோவிலையும் ஒப்பிட்டு, அதிலிருந்து ஜெர்மனியும், பிரான்ஸும் ஒரே மாதிரியாக நாகரீகத்தில் அபிவிருத்தியடைந்திருக்கின்றனவென்று சொல்லி முடித்தார். இதுவரையில் ஜெர்மனி பிரான்ஸைவிட முன்னுக்கு வந்துவிட்டதாகச் சொன்னதையெல்லாம் இவர் மறுத்துவிட்டார்.

பிரிடனைத் தோற்கடிப்பதற்காகவென்று, பிரிடனுக்குப் பக்கத்திலிருக்கும் தேசங்களை முதலில் பிடித்துக்கொண்டார்கள். ஆனால் பிரிடனைப் பிடிக்கமுடியவில்லை. இப்பொழுது அயல்நாடுகளின் நன்மைக்காக பிரிடனைப்பிடிக்கவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

3—10—40.

லண்டனில் ஆகாரப்பொருள்கள் கிராக்கியாய்க்கொண்டிருப்பதாயும், இதரநாடுகளைக்காட்டிலும், இங்கிலாந்தில் ஆகாரப்பொருள்களின் விலைவு மட்டென்றும் மாரிகாலத்தில் மூடுபனியால் வருந்தும்போது பஞ்சத்தால் மகத்தான கஷ்டமும் ஏற்பட்டு, கவர்ன்மெண்டு வகை புரியாது கலங்குமென்றும் ஜெர்மனி ஒலிபரப்புகிறது.

மாரிகாலத்தில் ஜெர்மனி கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதாலும், இனி இன்னும் அதிக கஷ்டப்படப்போவதாலும், சுய அனுபவத்திலிருந்து ஜெர்மனி பேசுவதாக நாம் வைத்துக்கொள்ளலாம். சென்ற மாரிகாலத்தில் ஜெர்மனி அவஸ்தைப் பட்டதைப்பற்றி அமெரிக்க நிருபர் வாரன் இர்வின் அக்டோபர் 4-ம்தேதியன்று லண்டனிலிருந்து பின்வருமாறு ஒலிபரப்புகிறார்: "நீண்ட மாரிகாலத்தில் போதுமான சாப்பாடில்லாது ஜெர்மனி பட்ட கஷ்டம் பட்டவர்களுக்குத்தான் தெரியும். உருளைக்கிழங்கையும், கீரையையும் தவிர வேறு ஒன்றும் ஜெர்மனியில் சாதாரண தொழிலாளிகளுக்குக் கிடைக்காது. கம்பளி வஸ்திரத்துக்கு பதிலாக மரத்தூள் கூழிலிருந்து செய்த துணிதான் கிடைக்கும். கடிதத்தால் செய்த ஜோடு போட்டுக்கொள்ளவேண்டும். அது ஜலம்பட்டால் ஊறிவிடும். வெளி ஜோடுகள் எர்ஸாட்ஸ் ரப்பரால் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளும் ஈரம் தாங்காது. வீடுகளில் குளிர்காய கணப்புக்கிடையாது. படுக்கையில் படுத்துக்கொண்டு போர்வைகளை உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டியதுதான். சென்ற மாரி காலத்தில், ஒரு நல்ல போஜனசாலை (Hotel)-யில் தங்கியிருந்தபோதிலும் இந்தக் கஷ்டங்களையெல்லாம் நான் அனுபவிக்க நேரிட்டது. பிரிடனை முற்றுகை போட்டு ஜெர்மனி ஜயிக்கமுடியாது. ஏனென்றால் ஜெர்மனியே முற்றுகை போடப்பட்டிருக்கிறது. பிரிடன் தன் தீவையே கோட்டையாக மாற்றிக் கொண்டு, எவ்வளவு காலமானாலும் யுத்தம் செய்யத் தயாராயிருக்கிறது."

4—10—40.

இதாலியானது மத்தியதரைக்கடல் தன்னுடையதென்று சொல்லிக்கொண்டிருக்கிறது. ஆனால் இந்தக்கடலின் மத்தியிலிருக்கும் மால்டா தீவை இன்னும் பிடிக்க முடியவில்லை. இது நிற்க, தூரக் கிழ்பிரதேசத்திலிருக்கும் லீயாங்க் என்ற கடல் கப்பல் நிலயத்தை பிரிடன் ஜப்பானுக்குக் கொடுத்துவிட்டதைப்பற்றி இகழ்ந்து பேசுகிறது. இக்கரைக்கு அக்கரை பச்சை. இதாலிய கப்பல் படை, சமீபத்தில் எதிரியைக்கண்டால் ஓட்டம்பிடிக்கிறது; தூரம் போகப்போக தைரியம்போல் காண்பித்துக்கொள்ளுகிறது. பிரிடனுக்குச் சைனாவில் ஹாங்காங் என்ற ஒரு கப்பல் நிலயம்தான் உண்டு. அது பிரிடனுடைய வியாபார ஸ்தலமுமாகும். இந்த இடம் பிரிடனுடைய கைவசத்தில் இப்பொழுதுமிருந்துகொண்டிருக்கிறது. விகி-ஹா-வீ என்ற கப்பல் நிலயமும், வின்-கங் என்ற தீவையும் 1930-ல் பிரிடன் சீனாவுக்குத் திருப்பிக்கொடுத்துவிட்டது. சீனாவுக்குள்ள பாத்தியத்தைக் கவனித்தே பிரிடன் இவைகளைக் கொடுத்தது. சீனாவை ஜப்பானும், அபிஸீனியா ஆல்பேனியாவை இதாலியும் அபகரித்த மாதிரியாக பிரிடனுக்கு அபகரிக்கும் எண்ணம் இல்லாததால் திருப்பிக்கொடுத்துவிட்டது.

5—10—40.

விமானப்போரில் சகஜமாய் ஜெர்மனிக்கு நஷ்டம் அதிகமாகவும் பிரிடனுக்கு நஷ்டம் குறைந்தும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. குறைந்த தொகை தனதென்றும் பெரிய தொகை பிரிடனுக்கு ஏற்பட்ட நஷ்டமென்றும் மாற்றி ஜெர்மனி பொய்ப் பிரசாரம் செய்கிறது. இதிலிருந்து உலகத்தை ஏமாற்றப்பார்க்கிறது.

உலகத்தாரும் உண்மையைத் தெரிந்துகொள்ளக் கஷ்டப்படுகிறார்கள். இன்று வந்த ஒலிபரப்பில், 'ஏரோபிளேன்' என்ற பிரிடிஷ் பத்திரிகை கொடுத்திருக்கும் விமான நஷ்டக் கணக்குக்கும், பிரிடிஷ் ஆகாய இலாகாக் கணக்குக்கும் வித்தியாசப்படுவதாகச் சொல்லுகிறது. இதிலிருந்து ஜெர்மனி (கோயபெல்ஸ்) சொல்லிக்கொண்டிருக்கிறபடி பிரிடனில் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுக்கிடையாதென்று தெரிகிறது.

6—10—40.

லண்டன் அழிந்து போய்விட்டதாக ஜெர்மனி சொன்னதெல்லாம் பொய் யென்று ஜெர்மன் (லார்ட்-ஹா-ஹா), ஒலியரப்பிலிருந்து வெளியாய் விட்டது. படையெடுத்த நாலு நாட்களுக்கெல்லாம், அதாவது, ஸெப்டம்பர் 11-ம் தேதி யன்றே லண்டன் அடியோடுபோய்விட்டதாகச்சொல்லப்பட்டது; 8 நாட்கள் கழித்து நகரமுழுவதும் அழிந்து விட்டதாக மறுபடியும் சொல்லப்பட்டது; இப்பொழுது லண்டன் பெரிய நகரமாயிருப்பதால் இன்னும் பூராவாக அழிக்கப் படவில்லையென்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து சொல்லுவதெல்லாம் பொய் யென்று ஏற்படுகிறது.

7—10—40.

'மலேரியா ஜ்வரமும், வயிற்றுக்கடுப்பும் எகிப்திலிருக்கும் பிரிடிஷ் சைன்யங் களுக்குப் பரவிக் கொண்டிருக்கின்றன' என்று பி. பி. ஸி ஒலிபரப்பின் விசேஷ நிருபர் சொல்லுவதாக ஜெர்மன் ரேடியோ ஒலிபரப்புகிறது. 'சிப்பாய்களுடைய சரீரஸ்திதி வெகு திருப்திகரமாகயிருப்பதாகவும், வியாதியால் பீடிக்கப்பட்டவர் கள் வெகு சிலர்கள்தான் என்றும், உஷ்ணப் பிரதேசமானதால், ஏதோ சிலர் களுக்கு மலேரியாவும், வயிற்றுக்கடுப்பும் ஏற்பட்டிருப்பதாகவும் மேற்சொன்ன நிருபர் ரிபோர்ட் செய்திருக்கிறார். உஷ்ண தேசங்களில் படையெடுத்து அனுபவ மில்லாத ஜெர்மனிக்கு இதெல்லாம் தெரியாத விஷயங்கள்தான்.

8—10—40.

லார்ட்-ஹா-ஹா ஒலிபரப்புக்கும், மற்ற ஜெர்மன் ஒலிபரப்புக்கும் வித்தியாசம் இருக்கிறது. இவர்கள் பொய் சொல்லுவதில் ஒருவரை ஒருவர் நன்றாய் கலந்துகொள்ளவில்லை. உதாரணமாக, இன்று, ஜெர்மனியில் போக்கு வரத்து சாதனங்களை வெடிகளால் சேதப்படுத்தியதாக பிரிடன் சொல்லுகிறது. "சேதங்களை ரூபிக்க எடுத்த போடோ—படங்கள் இருக்கின்றனவா?" வென்று ஜெர்மன் ரேடியோ கேட்கிறது. அதே ரேடியோவில், அரைமணிக்குப் பிறகு, வெடிகுண்டுகளிலிருந்து தப்பிக்க, மறைவிடங்கள் போதுமான வரையில் பிரிடனில் கட்டிக்கொள்ளவில்லை யென்றும், அதற்குக்காரணம், 'ஜெர்மனியைப் போல பிரிடனும் கட்டிக்கொள்ளவில்லை' என்றும், ஜெர்மனியிலும் நகரங்கள் சேதப்படுகின்றனவென்றும் அதற்கு அத்தாக்ஷியாக, ஜெர்மனியிலெடுத்த படங்களைப் பார்க்கலாமென்று பிரிடன் சொல்வதாயும் லார்ட்-ஹா-ஹா ஒலிபரப்பு கிறார். எது உண்மை?

9—10—40.

விமான நஷ்டங்களைப்பற்றி பொய்க்கணக்குக்கொடுப்பதே ஜெர்மனிக்கு வழக்கமாய்ப் போய்விட்டது. இதை ரூபிக்க நேற்று நடந்த விமானப்போரைப் பற்றி பிரிடிஷ்—விமானப்படை இலாகா விவரங்களைக் கொடுத்திருக்கிறது. ஜெர்மன் ஒலிபரப்புப்படி ஜெர்மனி நேற்று 3 விமானங்களைத்தான் தோற்றதாம். ஆனால், உள்ளபடி, நேற்று 8 ஜெர்மன்—விமானங்கள் உடைந்து விழுந்தன. இவை களுடைய தினுசு, குறிகள், விழுந்த இடங்கள், உயிர் தப்பிய விமானிகளின் பெயர்கள், இறந்த விமானிகளின் அடையாள நம்பர்கள் இவையெல்லாம் கண்டுபிடித்துப் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இம்மாதிரி விவரங்களைக் கொடுப்பது ஒவ்வொரு நாளும் சாத்தியப்படாவிட்டாலும், இதிலிருந்து ஜெர்மனி யின் பொய்யெல்லாம் வெளியாய் விட்டது.

10—10—40.

லார்ட்-ஹா-ஹாவுக்கு சர்ச்சில் பேச்சைக்கேட்கும் போதெல்லாம் கோபம் வந்துவிடும். ‘சர்ச்சில் போடும் திட்டங்களெல்லாம் மதி கெட்ட யோசனைகள். இவைகளை இங்கிலாந்திலிருப்பவர்கள் கேட்பார்களே ஒழிய, வேறு ஒருவரும் கவனிக்கமாட்டார்கள்’ என்று இவர் இன்று ஒலிபரப்பினார். இவர் இங்கிலாந்தில் பிறந்து இங்கிலாந்துக்கு விரோதம் நினைக்கும் துரோகி. ஜெர்மனியின் மனப் பான்மையை மாற்றுவதற்காக பிரிடன் பிரசாரம் செய்யவில்லையென்று இந்த மகாபாவி தெரிந்துகொள்ளட்டும்.

இதாலியானது யுத்தத்திலிறங்கியதிலிருந்து மத்தியதரைக்கடலில் பிரிடிஷ்—வியாபாரப்போக்குவரத்து 100-க்கு 90-பங்கு நின்று விட்டதாக ஸூயஸ்-கனால்-கம்பெனியின் ரிபோர்டு பாரிஸில் பிரசுரம் செய்திருப்பதாக இதாலி ஒலிபரப்பு கிறது. ஆனால் 100-க்கு 100 பங்கு, அதாவது, அடியோடு இதாலியின் வியாபாரம் நின்று விட்டதை இந்த ஒலிபரப்பு மறைத்துவிட்டது. சண்டையில் இதாலி சேருவதற்கு முன்னேயே ஸூயஸ் வழியாகப் போகும் வியாபாரத்தை பிரிடன் ‘கேப்’ மார்க்கமாய்த் திருப்பிவிட்டது. அதற்கு வேண்டிய ஏற்பாடு களையும் செய்துவிட்டது. ஆனால் ஸூயஸ் வழியாய் எகிப்த் வியாபாரம் மட்டும் நடந்து கொண்டிருக்கிறது. இது இதாலி—ஒலிபரப்பிலிருந்தே வெளியாகிறது.

11—10—40.

ஜெர்மனியிலுள்ள ராணுவ—ஸ்தலங்களில் பிரிடிஷ்—விமானங்களால் ஏற்படும் சேதங்களை நிருபர்கள் பார்க்கக்கூடாதென்று ஜெர்மனியில் சட்டமேற் பட்டுவிட்டது. அதற்கு பதிலாக நிருபர்களைச்சேர்த்து வைத்துக்கொண்டு காப்டன் ரெயிக் என்பவன் செய்யும் ஒலிபரப்பைக்கேட்கச் சொல்லுகிறார்கள். இவர் சமீபத்தில் ஜெர்மன் கவர்ன்மெண்டால் மதிக்கப்பட்டு, பதக்கப்பரிசு கொடுக்கப்பட்டவர். பிரிடனில், ஆகாயத்தில், ஜெர்மன்—விமானங்களின் ஆதிபத்தியம் ஓங்கி நிற்கிறது’ என்று இவர் சொன்னதாக ஜெர்மனி ஒலிபரப்பு கிறது. இது உண்மையாயிருந்தால், ஏன் இன்னும், ஜெர்மனியானது பிரிடன்மேல்

சைன்யங்களைக்கொண்டு படையெடுக்கவில்லை? இந்த ஒலிபரப்பு ஏற்பட்ட இரண்டொரு தினத்துக்குள் ஒரு இங்கிலிஷ்—விமானம் (ஸ்பிட்-பைர்) 9 ஜெர்மன் விமானங் (பைடர்-பாம்பர்)களைத் தனிமையாய் எதிர்த்து, கலைத்து விரட்டியதை ஊரார்கள் பார்த்து நகைத்தார்கள்.

12—10—40.

வியாழக்கிழமை இரவு ஹாம்பர்க்கில் வீடுகள்மேல் குண்டுகள் போடப்பட்டதாகவும், பிரிடிஷ் விமானிகளுக்கு இவ்விதம் செய்ய பிரிடன் உத்தரவிட்டிருக்க வேண்டுமென்றும், நகர வாசிகளைப் பயமுறுத்துவது இதன் நோக்கமென்றும் ஜெர்மனி ஒலி பரப்புகிறது.

இதற்கு எதிராக நடுநிலை வகிக்கும் துருக்கி பின்வருமாறு பிரஸ்தாபிக்கிறது. 'ஜெர்மனியிலுள்ள ராணுவ நிலயங்களைக் குறி தவருது எதிர்ப்பதில் பிரிடிஷ் விமானிகளுக்கு அபூர்வமான சாமர்த்தியமிருப்பதாயிருக்கிறது. ஹாம்பர்க் துறைமுகம் இனி உபயோகப்படாதபடி நாசமாக்கப்பட்டுவிட்டது. ஆனால் ஹாம்பர்க் ஊர்வாசிகளுக்கு ஒருவிதமான சேதமும் ஏற்படவில்லை''.

சில வாரங்களுக்குள், ஐரோப்பாவிலாவது, தூரக் கீழ் பிரதேசத்திலாவது யுத்தம் செய்ய நேரிடுமே யென்று யுனைடெட் ஸ்டேட்ஸ் சேனுபதிகளும், கடற்படை அதிகாரிகளும் நடுங்குவதாக அமெரிக்க நிருபர் கார்ல் வான் வெய்காண்டு சொன்னதாக ஜெர்மனி ஒலி பரப்புகிறது. தனக்கு அமெரிக்காவில் தேசங்களைப் பிடித்துக்கொள்ளும் ஆசை இல்லையென்று இந்த நிருபருக்குப் பேட்டி கொடுத்த சமயத்தில் ஹிட்லர் நேரில் பிரஸ்தாபித்தார். ஆகையால் இவர் வார்த்தையில் அதிக நம்பிக்கை வைக்க இடமில்லை. ஹிட்லருடைய உறுதிமொழிகளை நம்பக்கூடாதென்றும், மிஸ்டர் (அல்லது ஹெர்?) வெய்காண்டைப்போன்ற 5-ம் படைக்காரர்களின் சூட்சியினுல் ஏமாந்து போகக்கூடாதென்றும் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் சமீபத்தில் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்திலிருக்கவேண்டும்.

13—10—40.

ருமேனியத்துருப்புகளைப் பழக்கியபிறகு ருமேனியாவை விட்டு விலகிக் கொள்ளுவதாக ஜெர்மனி சொல்லுகிறது. பிடித்துக்கொண்ட தேசங்களைப்பற்றி ஜெர்மனி இப்படி சொல்லிக்கொள்ளுவது வழக்கம். ருமேனிய சைன்யத்தை எதற்காகப் பழக்குவது? பக்கத்திலிருக்கும் பல்கேரியாவைப் பிடிக்கவா அல்லது தனக்கு வெகு சிநேகமென்று சொல்லிக்கொண்டிருக்கும் ரஷியாவை எதிர்க்கவா? இன்றைக்குப் பிடித்த தேசத்தை நாளைக்கு பீரங்கிகளுக்கு இரையாக்கும் ஸ்வபாவம் ஜெர்மனிக்குண்டு.

14—10—40.

'ஜெர்மனி பாதுகாக்கும் இடங்களில் பிரிடிஷ் விமானங்கள் தலை காட்டமாட்டா' என்று ஜெர்மனி சொல்லிக்கொள்ளுகிறது. ஆனால், ஹாம்பர்க் கப்பல்

கட்டும் நிலயங்கள், கீல் கப்பல் நிலயம், குரூப் வெடிமருந்து சாலை, டார்ட்மண்டு எம்ஸ் கால்வாய், டாக்டர் கோயபெல்ஸின் ரோஜா புஷ்பவனம் எல்லாம் பிரிடிஷ் விமானங்களால் அழிக்கப்படுகின்றன. முடிந்தால் இவைகளைக் காப்பாற்றிக் கொள்ளட்டுமே.

B—ஆசியா ப்ராஷைகளில் ஒலிபரப்பு.

2—10—40.

இந்தியாவைப் பாதுகாக்க பிரிடன் சத்துருக்களை எகிப்த் எல்லையிலேயே மறித்துத்தடுத்து விட்டது. இதெல்லாம் இதாலிக்குப்பிடிக்கவில்லை. 'இந்தியாவுக்கு அபாயமொன்றும் இல்லையே' யென்று இதாலி ஒலிபரப்புகிறது. இதெல்லாம் பாசாங்கு. 'எகிப்தைப் படையெடுக்கும் உத்தேசம் இல்லை' என்று ஸெப்டம்பர் 15-ல் சொல்லிவிட்டு மறு நாள் படையெடுத்தது. ஸெப்டம்பர் 21-ல் அராபியர்களோடு சிநேகமென்று சொல்லிக்கொண்டே, அதே தினத்தில் ஹைபாவில் வெடிகுண்டுகளைப்போட்டு 32 பேர்களைக்கொன்று 68 பேர்களைக் காயப்படுத்திற்று. ஒரு மசூதிமேலும் குண்டுகள் விழுந்தன. ஜெர்மனியும் தான் பிடித்த நாடுகளைப் படையெடுக்கப்போவதில்லையென்று கடைசி வரையில் சொல்லி விட்டு, திடீரென்று அவைகளைப்பிடித்துக்கொண்டுவிட்டது. உதாரணமாக, ஹாலண்டையும், பெல்ஜியத்தையும் பிடிக்கப்போவதில்லையென்று மே மாதம் 10-ம் தேதி காலை 6-மணிக்குச் சொல்லிற்று. அதற்கு 3-மணிக்கு முன்பேயே படையெடுத்துவிட்டது.

3—10—40.

முஸ்லீம் தேசங்களில் பிரிடன் அடக்கு முறைகளை அனுஷ்டிப்பதாக இதாலி சொல்லுகிறது. ஹாதார்மாத்தை பிரிடிஷ் விமானங்கள் எதிர்த்ததாக ஜெர்மனி சொல்லுகிறது. இவைகள் பொய்யென்று ரூபிக்க பிரசித்திபெற்ற அராபியர் ஆல்-மிஸிரி என்ற எகிப்து பத்திரிகையில் எழுதியிருக்கும் நிருபமே போதும். அவர் சொல்லுவதாவது :—

"நாள் தவறாது, பிடிவாதத்தோடு சொல்லும் இந்தப் பொய்களைக்கேட்க ஹாதார்மாத்—வாசிகள் ஆச்சரியப்படுகிறார்கள். ஹாதார்மாத்திலும், ஏடனிலும் இவைகளைக்கேட்பவர்களுக்கெல்லாம் இவை பொய்களென்று நன்றாய்த் தெரியும். பொய் சொல்லுவதில் அச்சம் வேண்டாமா? ஜெர்மனியினுடையவும், இதாலியினுடையவும் மனப்போக்கு விசித்திரமாயிருக்கிறது. இவர்கள் பிரிடனை தூஷிக்கிறார்களே. அபிஸீனியாவிலும், லிபியாவிலும் இதாலி செய்யும் அக்கிரமங்களைப்பற்றி ஏன் பிரஸ்தாபிக்கவில்லை? இதாலிக்குச் சொந்தமான தேசங்களிலெல்லாம் கலகங்கள் நடக்கின்றனவே; ஏன் அவைகளைப்பற்றி ஒலிபரப்பவில்லை."

7—10—40.

அரா்பிய நாடுகளைப்பற்றி பிரிடிஷ் ஒலிபரப்புப் பொய்ப் பிரசாரம் செய்வ தாகவும், ஹாதார்மாத் ஜனங்களை பிரிடிஷ் சிப்பாய்கள் யந்திர பீரங்கிகளைக் கொண்டு சுட்டதாகவும், வெடிகளைப்போட்டதாகவும் பாரி ஒலிபரப்புச் சொல்லு கிறது. வீசிர், முகாலா சுல்தான் அவர்களே இவைகள் பொய்யென்று பின்வரு மாறு சொல்லுகிருர் :—"முதலாவதாக ஹாதார்மாத்தை எதிர்க்க அவசியம் ஒன்று மில்லை. ஹாதார்மியர்களும் பிரிடிஷ்காரர்களும் வெகு நேயம். இந்தப் பொய்ப் பிரசாரத்தைக்கேட்க ஹாதார்மியர்களெல்லோரும் ஆச்சரியப்படுகிருர் கள். நானும் ஆச்சரியப்படுகிறேன். இதாலிய-ஒலிபரப்புகள் ஓயாது இந்தப் பொய்யைச் சொல்லுவதால் என்மனசாக்ஷி இதைப் பிரசுரம் செய்யக் கட்டாயப் படுத்துகிறது."

8—10—40.

"இப்பொழுது நடக்கும் கடுமையோடு இனியும் தகர்க்கப்பட்டால், சில வாரங் களுக்குப்பின் எதிர்க்க லண்டன் நகரமே இராது" என்று ஒரு நடு நிலைநாட்டுத் தலைவர் சொன்னதாக ஜெர்மனி ஒலி பரப்புகிறது. அவருடைய பெயரை வெளிப் படுத்தவில்லை. 'லண்டன் அடியோடு போய்விட்டதாக' ஒரு மாதத்துக்கு முன் பிரஸ்தாபித்தார்கள். பிறகு, 'லண்டனில் எல்லாம் அசைவற்று நின்றுவிட்டது' என்ருர்கள். ஆகவே, இவர்கள் சொல்லுகிறபடி ஒரு மாதமாக பிரயோசனமற்ற படையெடுப்பு நடந்துகொண்டிருக்கிறது. மற்ருெருவிதத்திலும் இந்த படை யெடுப்பு ஆரம்பம் முதற்கொண்டே பிரயோசனமற்றதென்று சொல்லலாம். ஏனென்ருல், ஒரு விதமான அழிவும் லண்டனுக்கு இது வரையில் ஏற்படவில்லை. இனிமேல் ஏற்படப்போவதுமில்லை.

9—10—40.

இந்தியாவைப்பற்றியும், இந்தியர்கள் மனநிலையைப்பற்றியும், இந்தியர்களை விட ஜெர்மனி அறிந்து கொண்டதுபோல் ஒலிபரப்புகிறது. இந்த யுத்தத்தில் பணத்தையாவது, உயிரையாவது கொடுக்க இந்தியர்களுக்குச் சம்மதமில்லையாம். ராணுவத்துக்கு ஆள்கூட்டும் வேலைதாமதமாய் நடக்கிறதென்று நேரிலும், எழுத்திலும் அநேக புகார்கள் வந்திருப்பதாக பஞ்சாப் பிரதம மந்திரி சொல்லு கிருர். வைஸிராய்-யுத்த-காரியங்கள்-நிதிக்குக் கேட்காமலே, ஸெப்டம்பர் 15-ம் தேதிக்குள் இரண்டு கோடி ரூபாய் சேர்ந்து விட்டது.

14—10—40.

இந்தியா, எகிப்த், பாலஸ்தீனம், ஸிரியா, இராக் தேசங்களிலிருந்து ஹாஜ்-யாத்திரை மெக்காவுக்குச் செய்ய பிரிடன் தடைசெய்யுமென்று இதாலியர் பயப் படுவதாக ஒலிபரப்புகிருர்கள். என்ன பொய்! இந்த யாத்திரைக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் பிரிடிஷ் கவர்ன்மெண்டு கொடுத்துக்கொண்டிருக்கிறது. 'இஸ்லாம்-ரக்ஷகர்' என்று பெயர் வைத்துக்கொண்ட முஸோலினிதான் வழியில் ஆபத்துக்களை ஏற்படுத்த முடிந்தால் முயற்சி செய்வார்.

ஜெர்மனியானது அதிக நஷ்டமில்லாது, பிரிடனை எதிர்ப்பதாக ஒரு ஸ்வீடிஷ் பத்திரிகை எழுதுவதாக ஜெர்மனி ஒலிபரப்புகிறது. இந்த மூடு மந்திரத்தை உபதேசித்த பத்திரிகைக்குப் பெயர் கிடையாது. ஆனால் ஸ்வீடிஷ் பத்திரிகை யான டாகன்ஸ் நிகிடர், நேற்று, 'ஆறு வாரங்களாக எதிர்க்கப்பட்டும் லண்டனானது சேதப்படாமல் வேண்டிய யுத்த காரியங்களை நடத்திவரும் பிரதான பட்டணமாக இருந்து வருகிறது. வீடுகளும், தொழிற்சாலைகளும் 100-க்கு 1 வீதம்கூட சேதமாகவில்லை' என்று எழுதியிருக்கிறது.

மாலுமிகள், இன்ஜின்-அடுப்பு-வேலைக்காரர்கள் (ஸ்டோகர்கள்), தந்தி அடிப்பவர்கள், கம்பியில்லா தந்தி (வயர்லெஸ்) அடிப்பவர்கள், ராயல் இந்திய கடற்படைக்கு சேர்க்கவரும் கவர்ன்மெண்டு கோஷ்டியார் சுற்றுப்பிரயாண அட்டவணை.

இடம்.	தேதி, கிழமை.	வரும் நேரம்.	புறப்படும் நேரம்.	குறிப்பு.
	நவம்பர்மீ—			
மங்களூர் ...	4 திங்கள்	மாலை	...	மங்களூரில் இரவில் தங்குவார்கள்.
,, ...	5 செவ்வாய்	...	...	மங்களூரில் ஆட்களைப் பொறுக்குவார்கள்.
,, ...	6 புதன்	...	09.35	ரயிலில் பிரயாணம்.
கண்ணனூர் ...	,,	12.35	...	கண்ணனூரில் ஆட்களைப் பொறுக்குவார்கள்.
,, ...	7 வியாழன்	...	12.55	கண்ணனூரில் ஆட்களைப் பொறுக்குவார்கள்; அன்றே புறப்படுவார்கள்.
கள்ளிக் கோட்டை.	,,	15.00	...	கள்ளிக்கோட்டையில் அன்றிரவு தங்குவார்கள்.
,, ...	8 வெள்ளி	...	15.00	ஆட்கள் பொறுக்கிவிட்டு, புறப்படுவார்கள்.
எர்ணுக்குளம்...	9 சனி	10.00	...	எர்ணுக்குளத்தில் ஆட்களைப் பொறுக்குவார்கள்.
,, ...	10 ஞாயிறு	...	...	எர்ணுக்குளத்தில் தங்குவார்கள்.
,, ...	11 திங்கள்	...	10.00	கொல்லத்துக்குப் புறப்படுவார்கள்.
கொல்லம் ...	,,	15.00	...	கொல்லத்தில் இரவு தங்குவார்கள்.
,, ...	12 செவ்வாய்	...	...	கொல்லத்தில் ஆட்களைப் பொறுக்குவாகள்.
,, ...	13 புதன்	...	10.00	ரயிலில் பிரயாணம்.
சென்னப் பட்டணம்.	14 வியாழன்	07.00	...	சென்னப்பட்டணத்தில் தங்குவார்கள்.
,, ...	15 வெள்ளி	...	...	சென்னப்பட்டணத்தில் ஆட்களைப் பொறுக்குவார்கள்.
,, ...	16 சனி	...	08.00	ரயிலில் பிரயாணம்.
டில்லி ...	18 திங்கள்	09.00	...	டில்லியில் தங்கியிருப்பார்கள்.
,, ...	19 செவ்வாய்	...	08.00	ஜஜருக்குப் புறப்படுவார்கள்.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் XVI.

1940—				மணி.
அக்டோபர் 26,	சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	7.00
27,	ஞாயிற்றுக்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம் ...	காலை	10.25
		திருவப்பூர் ...	மாலை	5.30
		காரையூர் ...	,,	5.30
		மிதுலைப்பட்டி ...	,,	5.30
28,	திங்கட்கிழமை ...	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை ...	,,	10.25
		குருவிக்கொண்டான் பட்டி.	மாலை	5.30
		வேங்கடக்குளம் ...	,,	5.30
31,	வியாழக்கிழமை ...	வேந்தம்பட்டி ...	,,	5.30
		ராயவரம் ...	,,	5.30
		கீழாநிலை ...	,,	5.30
நவம்பர் 1,	வெள்ளிக்கிழமை ...	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00
		திருமயம் ...	மாலை	5.30

பிரஸங்கம் XVII.

நவம்பர் 2,	சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
3,	ஞாயிற்றுக்கிழமை.	புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம்.	,,	5.00
		ராசியமங்கலம் ...	,,	5.30
		கீரனூர் ...	,,	5.30
4,	திங்கட்கிழமை ...	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
		ராணி பெண்பாடசாலை ...	,,	10.25
		பனையபட்டி ...	மாலை	5.30
		குழிபிரை ...	,,	5.30
5,	செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (A) ஆங்கிலம் ...	காலை	10.25
		வேகுபட்டி ...	மாலை	5.30
		புதுப்பட்டி (பொன்னமராவதி).	,,	5.30
6,	புதன்கிழமை ...	ஒடையாளிப்பட்டி ...	,,	5.30
7,	வியாழக்கிழமை ...	ராங்கியம் ...	,,	5.30
		புதுக்கோட்டை டவுன் உபாத்தியாயர்கள் சங்கம்.	,,	3.30
8,	வெள்ளிக்கிழமை.	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00

தேவை

(புதுக்கோட்டை யுத்த அறிக்கை நிலயம்).

இதற்கு ஓடும் நிலைமையுள்ள ஒரு பழைய மோட்டார் சாஸீஸ் (Chassis) தேவை.

தேசாபிமானமுள்ள கனவான்கள்
யாராவது ஒருவர்
இதை நன்கொடையாகக்
கொடுத்து உதவினால்,
அதற்கு பாடி (Body) முதலிய துகட்டி
அதை நிலயத்தின்
சுற்றுப்பிரயாண அறிக்கை வண்டியாக
ஸமஸ்தானத்தில்
உபயோகப்படுத்தப்படும்.

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—26-10-40.